சாயி மகராஜ் குருவை தேடி
SAI MAHARAJ GURUVAI THEDI

ஆண்டு: 4	இதழ்: 12	மே - 2023	விலை - ரூ.15/-
VOL:4	ISSUE: 12	MAY - 2023	Rs. 15/-





பார்ஆண்ட வேந்தன்
பதிரகிரியார்!

சாயி பக்தர்களுக்கு ஓர் வரப்பிரசாதம்



நமது சாயி மகராஜ் குருவை தேடி ஆன்மீக மாத இதழுக்கு மூன்று வருடத்திற்கு ரூ.550/- மட்டும் செலுத்தி சந்தாதாராராகுங்கள்!

அறிய பொக்கிஷமான "சாயி தாயத்தை" இலவசமாகப் பெறுங்கள்!

கடன், நோய், வறுமை, செய்வினைக் கோளாறுகள், கண் திருஷ்டி, குழந்தையின்மை, குடும்ப பிரட்சினை, செய்தொழில் திருப்தியின்மை, கல்விக்குறைபாடு அனைத்தையும் போக்கி உங்கள் வாழ்வு வளம் பெறுவதற்கென்றே, சற்குரு சாயிநாதரின் திருவடிகளில் சமர்பிக்கப்பட்டு, 108 நாட்கள் தவத்தின் மூலம் உரு ஏற்றப்பட்ட சக்தி வாய்ந்த "சாயி தாயத்து"



* தாயத்தை அணிந்து பலன் பெற "குண்டலினி யோகி" ஸ்ரீராம் சாய் அவர்களை தொலைபேசியில் தொடர்பு கொண்டு விளக்கம் பெறவும்.

* தனிப்பட்ட முறையில் தாயத்து வேண்டுவோர், தங்கள், பெயர், நட்சத்திரம், பிறந்ததேதி, தெரிவித்து பெற்றுக்கொள்ளலாம்.

தொலைபேசி எண்: 88258 31068.

தாயத்து காணிக்கை: 50₹/ மட்டுமே

பணம் அனுப்பவேண்டிய முகவரி:

V. SRIRAM,
INDIAN BANK,(PURASAIWAKKAM BRANCH), CHENNAI.
A/C.NO: 62 19 48 06 77,
IFS CODE: IDIB000P056.

G- PAY, PHONE PAY, NO: 99418 16692

சாயி மகராஜ் குருவை தேடி
SAI MAHARAJ GURUVAI THEDI

ஆண்டு-4 மலர்-12 மே - 2023

வெளியிடுபவர் / ஆசிரியர்

V.ஸ்ரீராம்

கௌரவ ஆசிரியர்

திருமதி.S.ஜெயந்தி ஸ்ரீராம்

விளம்பர பிரிவு

திரு.T. கார்த்திகேயன், கோவை

கௌரவ ஆலோசகர்கள்

திருமதி. S.சாந்தி, சென்னை.

திருமதி.A.சரண்யா ஞானமூர்த்தி, சென்னை.

திருமதி.Dr.கீர்த்தி சௌஜன்யா, சென்னை.

திரு. B.முருகன், சோழவந்தான்.

டாக்டர் செல்வி. S.சௌம்யா, ஊட்டி

இதழ் வடிவமைப்பு

சிகரம் பப்ளிகேஷன்ஸ்

உங்கள் கருத்துக்கள், சிந்தனைகள் மற்றும் விமர்சனங்களை அனுப்ப வேண்டிய முகவரி:-

V.ஸ்ரீராம்

எண்:17/7A. பழனியப்பா முதல் தெரு, 1-வது மாடி, அயனாவரம், சென்னை 600 023.

செல்: 99418 16692,88258 31068.

கதைகளில் இடம்பெறும் சம்பவங்களும் பெயர்களும் கற்பனையே! இதழில் வெளியாகும் விளம்பரங்கள், விளம்பர கட்டுரைகளின் நம்பகத் தன்மைக்கு நிர்வாகம் பொறுப்பல்ல. விளம்பரங்களை அவரவர் சொந்த பொறுப்பிலேயே அணுக வேண்டுகிறோம்.



உனக்கு அறிவுரை சொல்பவர்கள் உடன் இருப்பது இல்லை. அப்படி இருப்பவர்கள் விலகிச் செல்லவும் தயங்குவதில்லை. நீ நன்றாக இருந்தால் மட்டுமே இந்த உலகமும், உறவுகளும் உன்னை நேசிக்கும் சற்று தளர்ந்து போனால் உன்னை ஏசும். இதுதான் வாழ்க்கை. இனிதான் உனது பயணம் துவங்கப் போகிறது.மனம் தளராமல் பயணத்தை தொடங்கு.

எப்படிப்பட்ட கஷ்டங்கள் வந்தாலும் அதை மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொள். உனக்கு வேண்டியதை செய்ய நான் ஒருவன் மட்டுமே கடமைப் பட்டுள்ளேன். இந்த மாயை உலகத்தில் நீ காண்பது, கேட்பது, பழகுவது, அனைத்தும் மாயை. நேரம் கடந்து போனால் அனைத்தும் உன்னை விட்டு விலகிப் போய்விடும். நீ தான் தன்னம்பிக்கையோடும் தைரியத்தோடும், வாழ வேண்டும்.

எவரைப் பற்றியும் கவலைப்படாமல் நீ வாழும் வாழ்க்கைக்கு மதிப்பு வரும்படி வாழ பழகிக்கொள்.தூற்றுபவர்கள் தூற்றட்டும். நான் உன்னுடன் இருக்கும் வரை எதற்காகவும், எந்த சூழ்நிலையிலும் கலங்காதே! உன்னை உயர்த்தி அழகு பார்க்கப் போகிறேன். உன்னை காப்பது எனது கடமை. நான் இருக்கிறேன். எதை செய்ய நினைத்தாலும் என்னை நினைத்து செயல்படு. நான் உன்னை கைவிட மாட்டேன்.

- பகவான் ஸ்ரீ சாயிபாபா

ஆசிரியர் பக்கம்...

அன்பிற்கினிய சாய் சொந்தங்கள் அனைவருக்கும் வணக்கம்!



பகவான் சாயிநாதரின் அருளால் ஐம்பத்து எட்டாவது இதழ் மூலம் உங்களை சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சி. சென்ற இதழின் வெளியீட்டு விழா 09.04.2023 ஞாயிற்றுக்கிழமை காலை பத்து மணிக்கு நமது சாய் தியானாலயா பிரார்த்தனை மையத்தில் (17/7A, பழனியப்பா முதல் தெரு, முதல்மாடி, அயனாவரம், சென்னை23) வெகு விமரிசையாக நடைபெற்றது.

வழக்கம்போல் காலை 8 மணிக்கு ஆசிரியரின் சத்சங்கத்துடன் ஆரம்பித்த விழா, தியானம், பஜனை எனத் தொடர்ந்தது. காலை 10 மணிக்கு புத்தக வெளியீட்டு விழா தொடங்கியது

இம்மாத இதழை திரு. பாலாஜி அவர்கள் வெளியிட, சிம்மக்குரலோன், சாயி பாடகர் திரு. சந்திரன் அவர்கள் பெற்றுக்கொண்டு சிறப்பித்தார்கள்.

பாராயணப்பகலவன் திரு. சுந்தர் சாய் அவர்களும், திருமதி. மாதங்கி பாலாஜி அவர்களும் பக்தர்களிடையே உரையாடினார்கள்.

விழாவிற்கு வந்திருந்த பக்தர்க ளுக்கு சாய் தியானாலயா பிரார்த்தனை மையம் சார்பில் அன்னபிரசாதம் வழங்கப்பட்டது. புத்தக வெளியீட்டை ஒட்டி ஏழை எளியவர்களுக்கு அன்ன தானம் வழங்கப்பட்டது.

மேலும் நமது இதழுக்கு, சென்னை முரளிசாய்ராம் அவர்கள், மூன்று வருட சந்தா ஒன்றும், தஞ்சை மாவட்டம் பாபநாசம் நாராயணன் அவர்கள், ஒரு வருட சந்தா நான்கு பேரையும் இணைத்து சாயி சேவை புரிந்துள்ளனர். அவர்களும், அவர்களது குடும்பத்தினர் அனைவரும், நீள் ஆயுள், நிறை செல்வம், வான்புகழ், மெய்ஞானம் பெற்று வாழ்க வளமுடன் என்று பகவான் சாயிநாதரிடம் பிரார்த்திக்கிறோம்.



நமது சாய் தியானாலயா பிரார்த் தனை மையத்தின் இல்லாதோறுக்கும், இயலாதோறுக்கும், அவர்கள் இருக்கும் இடம் தேடிச்சென்று அன்னதானம் வழங்கும் திட்டத்திற்காக திரு.சந்திரன் அவர்களின் ஏற்பாட்டின் பேரில், பெரம்பூர் லட்சுமி அம்மன் கோவில் தர்மகர்த்தாவும், அரசியல் பிரமுகருமான திரு. லெட்சுமிபதி அவர்கள் நான்கு முட்டை அரிசி வழங்கியிருக்கிறார்கள். அவர்களும், அவர்களது குடும்பத்தார் அனைவரும் பகவான் சாயிநாதரின் ஆசியுடன் அனைத்து நலன்களும் பெற்று வாழ்க வளமுடன் என்று வாழ்த்துகிறோம்.

சென்ற ஏப்ரல் மாதம் ஆசிரியர் பக்கத்தில் நாட்டில் தலை விரித்தாடும் போதைப் பழக்கத்தின் காரணமாக, ஆளும் ஆட்சியாளர்களின் மனதில் மாற்றம் ஏற்பட்டு நாட்டில் மது விலக்கு கொண்டுவர வேண்டும் என்று பிரார்த்தனை வைத்திருந்தோம். பகவான் சாயிநாதரின் அருளால், ஏப்ரல் 12 ஆம் தேதி சட்ட மன் றத்தில் இவ்வாண்டு 500 மதுக் கடைகள் மூடப்படும் என்று அமைச்சர் திரு. செந்தில் பாலாஜி அவர்கள் அறிவித்துள்ளார்கள். அவர்க ளுக்கும், தமிழக அரசுக்கும் எங்களது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறோம்.

ஆ ட் சி யா ள ர் க ளு ம் , ம க் க ளுக்குத் தரும் இலவசங்களை தவிர்த்துவிட்டு, பூரண மதுவிலக்கை அமல்படுத்தலாம். அதற்கு முதலில் மக்கள் தயாராக வேண்டும். அதற்கு முன்னோடியாக பாபா பக்தர்கள் அரசு தரும் இலவசங்களை பெறா மல் புறக்கணிக்க வேண்டும்.

எனவே நமது கோரிக்கையாக, "இலவசங்களை தவிர்ப்போம், மது விலக்கை வரவேற்போம்" என்ற சங்கல்பத்தை உறுதியுடன் ஏற்றுக் கொண்டு. விரைவில் தமிழகத்தில் முழு மதுவிலக்கு நடைமுறைக்கு வர வேண்டும் என்று பகவான்



சாயிநாதரிடம் பிரார்த்திப்போம்.

வருகின்ற ஆகஸ்ட் மாதம் நமது சாயி மகராஜ் குருவை தேடி ஆன்மீக மாத இதழின் ஆறாவது ஆண்டு துவக்க விழா நடைபெற இருக்கின்றது. அதை முன்னிட்டு நமது இதழ் அதிக பக்கங்களை தாங்கி வெளிவருகிறது.



அதுசமயம் நமது சாயி பக்தர்களும், அன்பர்களும், நண்பர்களும், வியாபார பெருமக்களும், நமது இதழில் குறைந்தது அரை பக்கத்திற்காகவது

(அரைப் பக்கத்திற்கு ரூ.500/ மட்டும் விளம்பரக் கட்டணமாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது).உங்களது வியாபார விளம்பரங்களையோ, அல்லது உங்களது அன்பை வெளிப்படுத்தும் விதமாக தனிப்பட்ட விளம்பரங்களையோ கொடுத்து நமது ஆண்டு மலருக்கு சிறப்பினைச் சேர்க்க வேண்டுமாய் வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கிறோம்.

பகவான் சாயிநாதரின் அருளால் அனைவரும் அனைத்து நலன்களும் பெற்று, உலக மாந்தர்கள் அனைவரும் போர், பகை, அச்சமின்றி, ஆரோக்கியத்துடனும், நிம்மதியுடனும் வாழ வேண்டும் என பிரார்த்தித்து நிறைவு செய்கின்றோம். **மீண்டும் அடுத்த மாதம் சந்திப்போம்!**

வாழ்க வளமுடன்!

வாழ்க வையகம்!

– அன்புடன் ஆசிரியர்.

சேவை செய்!

பாபா சாகேப் எனப்படும் நீலகண்டனும் தாத்யா சாகேப் நூல்கரும் பள்ளிப் பருவத்தில் இருந்து உயர்நிலைக் கல்வி வரையில் ஒன்றாகப் பயின்ற நண்பர்கள். காலமும், விதியும் அவர்கள் இருவரையும் இரு வேறு திசைகளில் பிரித்து விட்டது. நூல்கர் பண்டரிபுரத்திற்குச் சென்றபின்பு நீலகண்டனுக்கு அவருடைய தொடர்பு விட்டுப்போனது.

மிகவும் அன்பானவரும், பழகுவதற்கு இனியவருமான, நீலகண்டன் மிகுந்த ஆன்மீக நாட்டமுடையவர். வேதங்களையும், உப நிடதங்களையும் கசடறக் கற்றதோடு அவற்றின் வழிபிறழாது நடந்து வந்தார். வாய்ப்பு கிடைக்கும்போதெல்லாம் ஞானிகளுடனும்,சத்புருஷர்களோடும் தொடர்பு கொண்டு அவர்களின் சத்சங்கத்தில் இருந்து ஆன்மீக ஞானச் செல்வத்தை பெற்றுக் கொள்ள தவற மாட்டார்.

அவர் ஒரு சமூக சீர்த்திருத்தவாதியாக, பெண் கல்வி, பால்ய விவாகம், விதவை மறுமணம் போன்றவற்றிலும், பெண்களின் உரிமைக்காகவும் குரல் கொடுப்பதில் எப்போதும் முன்னணியில் இருந்தார். மேலும் ஒடுக்கப்பட்ட மக்களுக்காக எங்கெல்லாம் குரல் தேவைப்பட்டதோ அங்கெல்லாம் இவரின் குரல், முதல் குரலாக ஒலித்தது.

1904 ஆம் ஆண்டு பிளேக் நோய் பரவியபோது, அவருடைய நேரம், செல்வம், உழைப்பு அனைத்தயும் பிளேக் நோயாளிகளுக்காவே செல விட்டார். பெரும்பான்மையான உறவினர்களே செய்யத்தயங்கிய இறந்தவர்களை தாமே சுமந்து சென்று இடுகாட்டில் எரித்து வந்தார்.

பல்வேறு பதவிகளை வகித்து வந்தவர், இராணுவ கணக்காளராகவும்,பாம்பே நகராட்சி செயலாளராகவும்,போஸ்லே அரச குடும்பத்திற்கு மேலாளராகவும் சில காலம் பணிபுரிந்தார்.

ஒரு முறை அவரது நண்பர் ஒருவர் குருவின் முக்கியத்துவம் பற்றி அவரிடம் வினவ, அதற்கு அவர், குருவானவர் சந்தையில் கிடைக்கும் பொருள் அல்ல, சாதகன் தன்னுடைய காமம், குரோதம்,மோகம்,மதம்,லோபம், மாத்சர்யம், என்ற ஆறு எதிரிகளை வென்றவனாகவும், பொறுமையாகவும் இருக்கும் பட்சத்தில் குருவே தன்னுடைய கருணையை அவன்மீது அபரிதமாக பொழிவார் என்றும் விடையளித்தார்.

1911 ஆம் ஆண்டில் நானா சாகேப் சந்தோர்கர் இராகிருஷ்ணமாயி கேட்டதற்கிணங்க, சமையல் பாத்திரங்கள் சிலவற்றை சீரடிக்கு அனுப்பிட விரும்பினார். இப்பணிக்கு பொறுத்தமான நபருக்காக காத்திருந்த வேளையில் தற்செயலாக நீலகண்டனை சந்திக்க நேர்ந்தது.

அப்போது நானா அவரிடம் இதுபற்றிக் கூறியபோது, நீலகண்டன் பாத்திரங்களை சீரடிக்கு கொண்டுபோக ஆகும் செலவிற்கு என்னிடம் பணம் இல்லை என்றார். பிறகு நானாவே அனைத்து ஏற்பாடுகளையும் செய்து அவரை சீரடிக்கு அனுப்பி வைத்தார். சீரடிக்கு

சென்ற நீலகண்டன் அங்கு தன்னுடைய பால்ய நண்பன் தாத்யா சாகேப் நூல்கரைக் கண்டு இன்ப அதிர்ச்சியடைந்தார்.

நீலகண்டன் சீரடிக்குச் சென்ற புதிதில் பாபாவின் தர்பாரில் சத்சங்கம் நடக்கும். அதில் பாபா பேசும் பரிபாஷையான கருத்துக்கள் யாருக்கும் புரியா தவையாக இருக்கும். அதை நூல்கரும், மற்ற பக்தர்களும் புரிந்து கொள்ள முயற்சிப்பதைக் கண்ட நீலகண்டன் அவர்களை மனநோய் காப்பகத்தில் இருக்க வேண்டியவர்கள் என்று திட்டுவார்.

அவர் பாபாவின் தரிசனத்திற்குச் சென்ற போது, பாபா அவரிடம் பரிபாஷையாக, "நூல்கருக்கும், ஜோக்குக்கும் நமஸ்காரம் செய்வதால் உன் மதிப்பு ஒன்றும் குறைந்து விடாது. உனக்கு நஷ்டமும் கிடையாது, நீ இருவருக்கும் சேவை செய்" என்று கூறினார். இதையே நீலகண்டனிடம் தொடர்ந்து மூன்று நாட்கள் கூறிக்கொண்டே இருந்தார்.

நீலகண்டன் சீரடியை விட்டு புறப்படுவதற்காக, ஷாமா மூலம் பாபாவின் அனுமதியைக் கோரி வந்தார். (பாபாவின் தரிசனத்திற்கு வந்தவர்கள் பாபாவின் அனுமதியைப் பெற்றே சீரடியை விட்டுச் செல்ல வேண்டும் என்ற வழக்கத்தின் படி) முதலில் பாபா, "அவன் நான்கைந்து நாட்கள் கழித்து புறப்படட்டும்" என்றார். ஆனால் நான்கைந்து நாட் களுக்குப் பின்பு மீண்டும் அவருக்காக நானா அனுமதி கேட்ட போது, "அவன் மசூதிக்கு எதிரில் நாய் போல் கிடக்கட்டும் அவனுக்கு சில முக்கியமான வேலைகள் இருக்கின்றன"



என்றார்.

எனவே நீலகண்டன் சீரடியிலேயே தங்கிவிட முடிவு செய்தார். அவர் தன் பால்ய நண்பரான நூல்கரிடம், உனக்கு நான் என்ன சேவை செய்ய வேண்டும் என்று உன் குரு விரும்புகிறார் என்று கேலியாகக் கேட்பார். ஆயினும் பாபாவின் வார்த்தைகளுக்கு ஆழ்ந்த பொருள் இருக்கும் என்றும், அதைக் காலமே உணர்த்த முடியும் என்றும் நூல்கர் திடமாக நம்பினார்.

சீரடியில் தங்கியிருந்தபோது நீலகண்டன் பல அற்புத அனுப வங்களை பெற்று, பாபாவே அனைவர் இதயங்களிலும் உறையும் சர்வாந்தர்யாமி என்பதை நன்கு உணர்ந்து கொண்டார். நீலகண்டனுக்கு அவ்வப்போது ஐயங்கள் எழும் போது பாபா அவரை தட்சணை வாங்கி வருதல் என்ற பெயரில், பாபு ஜாகேப் ஜோக்கிடமோ, அல்லது காகா சாகேப் தீட்சித்திடமோ அனுப்பு

வார். இவர் தட்சிணை கேட்கப் போகும் சமயம் அங்கு அவர்கள் பாராயணம் செய்து கொண்டிருக்கும் அத்யாயம் அவருடைய ஐயங்களுக்கு பொறுத்தமான விடையாக இருக்கும்.

இப்படி நீலகண்டனுக்கு பாபாவிடம் பக்தி பல்கி பெருகியது. இதற்கிடையே நூல்கர் திடீரென நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்டு உடல்நலமில்லாமல் ஆனார். அவ ரது உடலெங்கும் கட்டிகள் தோன்றி அச்சம் கொள்ளும் விதத்தில் வேக மாகப் பரவியது. நீலகண்டன் நூல்கரை அருகில் இருந்து கவனித்துக் கொண்டார்.

அவருடைய புண்களுக்கு மருந்திட்டு கட்டுப்போட்டுவிட்டார். நூல்கர் படுத்த படுக்கையாகிப் போய் எழுந்திருக்க முடியாமல் இருந்த போது நீலகண்டன்தான் அவருக்கு குடிக்க தண்ணீர் கொடுப்பது, சிறுநீர் கழிக்க உதவுவது போன்ற சேவைகளை மனம் நோகாமல் செய்து வந்தார்.

ஆனால் நூல்கரோ, நீலகண்டனின் சேவையில் மனம் நெகிழ்ந்து தன் நண்பருக்கு சிரமம் கொடுக்கின்றோமே என்று மன வருத்தம் அடைந்தார். ஆ னா ல் நீ ல க ண் ட னு க் கே கா மன வருத்தம் ஒன்றும் இல்லை. ச கல த்தையும் அறிந்த தேவன் சாயிநாதன் முன்பே "நூல்கருக்கு சேவை செய்வதால் உனது மதிப்பு ஒன்றும் குறைந்துவிடாது" என்று கூறினார் அல்லவா? அவர் எப்படி மன வருத்தம் அடைவார். தமக்கு நடக்கக்கூடிய வற்றை முன்பே உணர்ந்து கூறக்கூடிய தெய்வத்திடம் அல்லவா அவர் அடைக்கலமாகி இருக்கிறார்.

தாத்யா சாகேப் நூல்கர் மரண மடையும் வரை நீலகண்டன் அவருடனே இருந்து அவருடைய ஒவ்வொரு தேவைகளையும் பார்த்துப் பார்த்து கவனித்துக் கொண் டார். சாயியினுடைய வாக்கில் நீலகண் டனுக்கு அவ்வளவு மரரியாதை இருந்தது.

ஓம் சாய்ராம்.



மாதவ் ராவ் தேஷ்பாண்டே என்கிற ஷாமா

ஷாமா குழந்தையாக இருக்கும் பொழுதே சீரடிக்கு வந்துவிட்டார். சீரடியிலேயே வளர்ந்தார். அங்குள்ள பள்ளியில் ஆசிரியராக பணிபுரிந்தார் அந்த பள்ளிக்கூடம் துவாரகாமாயியை ஒட்டி இருந்தது. பாபாவின் மீது ஷாமாவிற்கு தனிப்பாசம் ஏற்பட்டது. வெளியூரிலிருந்து வரும் மனிதர்களை ஷாமா பாபாவுக்கு அறிமுகம் செய்து வைத்தார். அவர்கள் தங்குவதற்கான இடம், உணவு போன்றவற்றிற்கும் ஏற்பாடு செய்தார்.

பாபா அவர் மூலம் தான், அனைவரிடமும் பேசினார். தனக்கும் ஷாமாவுக்கும் 72 பிறவிகளாக தொடர்பு இருப்பதாக பாபா ஒரு முறை ஷாமாவிடம் கூறினார். கபர்தே என்ற மற்றொரு அடியவர் தான் எழுதிய நாட்குறிப்பில் பின்வருமாறு எழுதுகிறார். ஆழ்ந்த உறக்கத்திலும் கூட சாமா வெளியிடும் உள் மூச்சு மற்றும் வெளிமூச்சு இரண்டும் சாயி நாத், பாபா என்றே கேட்குமாம். பாபாவின் மீது அவர் கொண்டிருந்த பக்தியானது எவ்வளவு ஆழமானது என்று அறிய இது ஒரு சிறந்த உதாரணம்.

சாய் தியானாலயாவில் "சாயி லீலா"



– ஜெயந்தி ஸ்ரீராம்

சீரடி பயணத்திற்கு பணம் தராமல் ஏமாற்றிய நண்பரிடம் பணம் கேட்டு பதட்டம் ஆகாமல் உங்கள் பணம் எனக்கு வேண்டாம். அதை பாபாவிடம் கொடுத்துவிடுங்கள் என்று கூறிய குருவிற்கு பாபா என்ன கொடுத்தார் தெரியுமா?

நாங்கள் சீரடியில் இருந்து வந்த மூன்றாவது நாள்,நமது சபைக்கு வரும் செவ்வந்தர் ஒருவர் குருவை வந்து சந்தித்தார். சிறிது நேரம் சீரடி பயணம் பற்றி பேசிக்கொண்டிருந்தவர், சீரடிக்குச் செல்ல வேண்டும் என்று ஆசை இருந்தும் போக முடியாமல் இருக்கும் வசதி குறைவானவர்கள் யாராவது இருந்தால், அவர்களில் இரண்டு நபர்களுக்குண்டான, தொகையை நான் கொடுத்து விடுகிறேன். அவர்களை சீரடிக்கு கூட்டிச் செல்லுங்கள் என்றவர், அடுத்த முறை உங்களது பயணத்திற்குண்டான தொகையை நான் இப்போதே கொடுத்துவிடுகிறேன் என்று இரண்டு பயணச்சீட்டிற்கான தொகையை கொடுத்தார்.

குரு அவர்கள் எவ்வளவோ மறுத்தும் பிடிவாதமாக தொகையை கொடுத்தவர், உங்களின் மேல் எனக்கு நம்பிக்கை இருக்கிறது. நான் எதையாவது செய்யவேண்டும் என்று முடிவு செய்துவிட்டால் அதை அப்போதே செய்து விடுவேன். இல்லை என்றால் என் மனம் மாறிவிடும் அதனால்தான் இப்போதே செய்து விட்டேன். என்றார்.

குருவும், அவர்கூறியபடி அடுத்த முறை சீரடி செல்ல வேண்டும் என்று ஆசை இருந்தும் செல்ல முடியாத இரண்டு நபர்களை இலவசமாக அழைத்துச் சென்றார்.

பாபாவின் பாதம் வந்த கதை

பத்து வருடங்களுக்கு முன்பு நாங்கள் குருவிடம் மன்றாடி வியாழன் தோறும் பாபா வழிபாடு ஆரம்பித்த நேரம், குருவிற்கோ தியானம் தவிர ஏனைய வழிபாடுகளில் கவனம் இருந்தது கிடையாது. சகோதரி சரண்யாவின் முழு முயற்சியால் குரு அவர்கள் வார வழிபாட்டிற்கு ஒத்துக் கொண்டார்.

இந்நிலையில், பாபாவின்

பெயரைக்கூறி வாழ்க்கை நடத்தும் நண்பர் ஒருவர், அதாவது பாபா தினமும் என்னுடன் நேரிடையாக பேசுவார் என்றும், அன்றன்று நடக்கும் நிகழ்ச்சிகளை தனக்கு முன்கூட்டியே கூறிவிடுவார் என்றும், நான் கூறுவதைக் கேட்டு நீங்கள் நடந்து கொண்டால்தான் பாபாவின் அனுக்கிரகத்தைப் பெறுவீர்கள் என்றும் கூறுவார்.

அவர் எப்படியோ எங்களது மையத்தை தெரிந்து கொண்டு ஒருநாள் அவராகவே எங்களது வியாழன் வழிபாட்டிற்கு வந்தார். வந்தவர் தன்னை குருவிடம் "நான் பாபாவின் சீடன்" என்று அறிமுகப்படுத்திக் கொண்டார், எங்களது வழிபாட்டிலும் கலந்து கொண்டார்.

வழிபாடு முடிந்ததும் தன் கைபையில் இருந்து ஒரு பாபாவின் படத்தை எடுத்து குருவிடம் அளித்து, காலையில் பாபா என் கனவில் வந்தார். உங்கள் மையத்தின் முகவரியைக்கூறி உங்களிடம் இந்தப் படத்தைக் கொடுக்கச் சொன்னார். இனிமேல் உங்களது இடத்தில் இந்தப் படத்திற்குத்தான் பூஜைகள் நடக்க வேண்டும். அப்போதுதான் உங்களது பாபா பூஜை சிறப்பாக நடக்கும் என்றார்.

குருவோ எங்களை பூஜை நடத்த அனுமதித்ததே பெரிய அதிசயம். இந்த மனிதர் வேறு எதையாவது கூறி அவரின் மனதை கலைத்துவிடுவார் போலிருக்கின்றதே என்று அருகில் இருந்த நாங்கள் கவலைப்பட ஆரம்பித்தோம்.

குருவோ அவரிடம் இருந்து பாபாவின் புகைப்படத்தை பணிவுடன் பெற்றுக் கொண்டார். பின்பு உங்களை எனக்கு யார் என்று தெரியாது. முன் பின் பழக்கமில்லாத நீங்கள் கூறுவதை என்னால் முழுமையாக ஏற்றுக்கொள்ள முடியாது. நீங்கள் கொடுத்த இந்தப் புகைப்படத்தை நான் பெற்றுக் கொள்கிறேன். ஆனால் அதைத்தான் வணங்கவேண்டும் என்று நீங்கள் கூறுவதை என்னால் ஏற்க முடியாது. ஏன் என்றால் எங்கும் நிறைந்த பரம் பொருளை புகைப்படத்திலும், சிலையிலும் அடக்கி வைப்பதை என் மனம் ஒத்துக் கொள்ளாது.

தவிர நாங்கள் இங்கு பாபாவின் பூஜையை நடத்துகிறோம் என்று தெரிந்துதான் நீங்கள் இப்போது இங்கு வந்திருக்கின்றீர்கள். அப்படி இல்லாது, நாங்கள் பூஜை ஆரம்பிப்பதற்கு முன்பே நீங்கள் வந்து பாபாவின் புகைபடத்தை கொடுத்து இதை வைத்துத்தான் நீங்கள் பாபா பூஜை ஆரம்பிக்கவேண்டும் என்று கூறினீர்கள் என்றால்கூட நான் யோசிப்பேன். ஆகவே தவறாக நினைக்க வேண்டாம். என்னால்





நீங்கள் கூறுவதை ஏற்ற முடியாது. நீங்கள் எங்களது பூஜையில் கலந்து கொண்டதற்கு மிக்க நன்றி என்று கூறிவிட்டார்.

உடனே அந்த மனிதருக்கு சற்றே கோபம் வந்து விட்டது. என்னை யார் என்று தெரியாமல் இப்படி கூறுகின்றீர்கள். என்றவாறே ஒரு சில பாபா ஆலயங்களையும், சில பெரிய மனிதர்களின் பெயர்களையும் கூறி இவர்கள் அனைவரும் என்னுடைய பேச்சைக் கேட்டதனால்தான் இவ்வளவு வளர்ந்திருக்கிறார்கள்.உண்மையிலேயே நான் கூறுவது பாபாவின் வாக்கு என்பதை நீங்கள் போகப் போக உணர்வீர்கள். நான் கொடுத்த படத்தை வைத்து நீங்கள் பூஜை செய்யவில்லை என்றால் நீங்கள் அடுத்த வாரம் நிச்சயமாக பூஜை செய்ய முடியாது அது நிச்சயம் நடக்கும் என்றார்.

குருவும் நீங்கள் கூறுவது முழுக்க பொய் என்று நான் கூறுகிறேன். அது உண்மையானால் அடுத்த வாரம் இங்கு பாபாவே வந்து எனது மக்களின் பூஜையை ஏற்பார். உங்களுக்கும் அழைப்பு வரும். வந்து வணங்கிச் செல்லுங்கள் இப்போது போய் வாருங்கள் என்று அவரை அனுப்பிவைத்தார்.

அதன் பிறகு எங்களின் பக்கம் திரும்பி சற்றே கோபத்துடன், போதுமா? இன்னும் வேண்டுமா, நான் உண்டு, எனது தியானம் உண்டு என்று போய்கொண்டிருந்தேன். என்னை இழுத்து பூஜைக்குள் விட்டுவிட்டீர்கள். இப்போது இதுபோன்ற அரை வேக்காடுகளை எல்லாம் நான் சமாளிக்க வேண்டும். என்று சற்றே கோபப்பட்டார்.

அடுத்த மூன்றாவதுநாள் குருவின் நண்பரும், பெரம்பூர் சத்யசாயி பாபா கமிட்டியின் நிர்வாகியுமான திரு. சாய் அண்ணா, திரு. சங்கர் அண்ணா என்ற குருவின் நண்பர்கள் குருவினை தொலைபேசியின் மூலம் தொடர்பு கொண்டு, இன்னும் பத்து நிமிடத்தில் உங்கள் மையத்திற்கு வருகிறோம் என்று கூறிவிட்டு சொன்னபடியே மையத்திற்கு வந்தார்கள்.

வந்தவர்கள் ஒரு பெரிய பெட்டியையும் தூக்கி வந்தார்கள். திரு. சங்கர் அவர்கள் குருவிடம், இன்றைக்கு பாபா உங்கள் மையத்திற்கு வந்திருக்கிறார். இன்னும் பத்து நாட்களுக்கு உங்கள் மையத்தில்தான் இருப்பார். என்றார் பூடகமாய்.

எங்களுக்கோ ஆச்சர்யம், பெட்டியில் பாபாவின் சிலையாக இருக்குமோ என்று நாங்கள் ஆவலுடன் பார்த்துக்கொண்டிருக்கின்றோம்.
திரு. சங்கர் அவர்கள் கூறினார்கள், மயிலம் பாபா ஆலயத்திற்காக வெள்ளியில் பாபாவின் பாதம் செய்யப்பட்டு, பெரம்பூர் சத்ய சாயி

சமிதியில் பக்தர்களின் தரிசனத்திற்கு வைக்கப்பட்டிருந்தது. தற்போது அது மயிலம் பாபா ஆலயத்திற்கு அனுப்பட வேண்டும்.

அங்கு ஆலயம் தயாராவதற்கு இன்னும் பத்து நாட்கள் ஆகும் என்று கூறிவிட்டார்கள். அதுவரை எங்கு வைப்பது என்று யோசித்தோம். உங்கள் ஞாபகம் வந்தது. அதுதான் இங்கு எடுத்துவந்து விட்டோம்.என்று பெட்டியைப் பிரித்து வெள்ளியினால் ஆன பாபாவின் பாதத்தை எடுத்து வெளியில் வைத்தார்கள்.

அதன்பிறகு, பாபாவின் பாதம் பத்து நாட்களுக்கு இங்கேயே இருக்கட்டும், நானே வந்து எடுத்துப்போகிறேன் என்று கூறிவிட்டுச் சென்றுவிட்டார்கள் உடனே நாங்கள் பாபாவின் பாதத்திற்கு மலர்களால் அலங்காரம் செய்து தூப தீபங்கள் காட்டி வணங்கி மகிழ்ந்தோம். அடுத்த ஒரு மணி நேரத்தில் நமது மைய உறுப்பினர்களும், அக்கம் பக்கத்தில் உள்ளவர்களுக்கும் தகவல் பரவி கூட்டம்கூட்டமாக வந்து பாபாவின் பாதத்தை தரிசித்துச் சென்றனர்.

அடுத்து வந்த இரண்டு நாட்கள் மையத்தில் பாபாவின் பாதத்தை தரிசிக்க மக்கள் வந்த வண்ணமிருந்தனர். எங்களுக்கோ, போலியான பாபா பக்தர் கூறியதற்கு எங்களது குரு அவர்கள் கூறிய, நீங்கள் கூறுவது முழுக்க பொய் என்பதை நிரூபிக்க பாபாவே வந்து எனது மக்களின் பூஜையை ஏற்பார். உங்களுக்கும் அழைப்பு வரும். வந்து வணங்கிச் செல்லுங்கள் இப்போது போய் வாருங்கள் என்று கூறியதுதான் எங்களது நினைவிற்கு வந்தது.

குரு அவர்களின் வாக்கு பலித்து விட்டது. எங்கள் மையத்தில் நடக்கும் வார வழிபாட்டை பாபா ஏற்றுக் கொண்டு விட்டார். அதனால்தான் பாபாவே பாத வடிவில் எங்கள் மைய்யத்திற்கு எழுந்தருளியிருக்கிறார். பாபா வந்துவிட்டார். இப்போது அந்த போலி பக்தரைத்தான் காணோம்.

இதைப்பற்றி குரு அவர்கள் கண்டுகொண்டதாகத் தெரியவில்லை. நான்காம் நாள் காலையில் போலி பக்தர் கையில் மாலையுடன் மையத்திற்கு வந்தார். வந்தவர் நேரே பாபாவின் பாதத்திற்கு மாலை அணிவித்து வணங்கினார். சற்று நேரம் அமைதியாக அமர்ந்துவிட்டு குருவிடம் விடை பெற்றுச் சென்று விட்டார்.

அதற்குப்பின்பு எங்கள் மையத்திற்கு இன்றுவரை தொடர்ந்து வந்து கொண்டிருக்கிறார் ஆனால் அன்றில் இருந்து இன்று வரை எங்களிடம், பாபா கனவில் வந்தார், அதை செய்யச் சொன்னார், இதை செய்யச் சொன்னார் என்று பேசுவதில்லை. வருவார். பாபாவை வணங்கிவிட்டு அமைதியாக சற்று நேரம் அமர்ந்துவிட்டுச் சென்று விடுவார். இதைப்பற்றி நாங்கள் குருவிடம் கேட்டபோது, "பாபா ஒருவர் தான் மனிதனின் அகங்காரத்தை அவனை அறியாமலே அழித்து விடுவதில் வல்லவர்" என்றார்.

உடனடி திருமண லீலை

ஆறு மாதத்திற்கு முன்பு ஒரு நாள் குரோம்பேட்டையைச் சேர்ந்த பாலமுருகன் என்ற பாபாவின் பக்தர் குருவைப் பார்க்க மையத்திற்கு வந்தார். சத்சங்கத்திலும், தியானத்திலும் கலந்து கொண்டவர் அமைதியாக அமர்ந்திருந்தார். குரு அவர்கள் ஒவ்வொருவரிடமாக பேசிக்கொண்டே வந்தவர் பாலமுருகனைப் பார்த்து உங்களுக்கு பாபாவிடம் இருந்து என்ன வேண்டும் என்று கேட்டார்.



அவரோ, எவ்வளவோ முயற்சித்தும் இன்னும் எனக்கு திருமணம் ஆகவில்லை குருவே, எனக்கு திருமணம் தான் ஆக வேண்டும் என்றார். அதற்கு குரு அவர்கள், அதுதான் ஏற்பாடு ஆகிவிட்டதே, திருமணம் விரைவில் நடைபெறப் போகிறது என்றார்.

அதற்கு அந்த நண்பரோ, இல்லை குருவே, திருமணத்திற்காக இதுவரை 37 பெண்கள் பார்த்துவிட்டேன். எனக்கும் 38 வயதாகிவிட்டது என்றார். குரு அவர்கள், கவலைப் படாதீர்கள் 38 வது பெண்ணை நீங்கள் பார்க்க மாட்டீர்கள். என்றார். அவரோ பயந்துபோய் என்ன சொல்கிறீர்கள் குருவே என்றார்.

பயப்படவேண்டாம் நீங்கள் பெண் பார்க்கும் படலம் முடிந்து விட்டது. 38 வது பெண்ணை நீங்கள் பார்க்க போக மாட்டீர்கள் அதை உங்கள் வீட்டாரே பார்த்து முடிவு செய்வார்கள். அதுவே நீங்கள் மணக்குப்போகும் மணப்பெண் என்றார் குரு. மேலும் இன்னும் ஒரு மாதத்தில் உங்கள் திருமணம் நடக்கும் என்றார்.

அந்த பக்தர்க்கோ ஒன்றுமே புரிய வில்லை. 15 வருடமாக நான் பெண் பார்த்துக் கொண்டிருக்கின்றேன். இதுவரை எனக்கு திருமணம் நடந்தபாடில்லை. நீங்களோ அடுத்த மாதம் திருமணம் நடக்கும் என்கிறீர்கள். இதை நம்புவதா, இல்லையா என்று தெரியவில்லை. ஆனால் ஒன்று, இன்று உண்மையிலேயே 38 வது பெண்ணை பெண்பார்க்கப் போவதாக இருந்தது. நான் வெறுத்துப்போய் நான் பெண் பார்க்க வரவில்லை. நீங்களே போய் பார்த்து வாருங்கள் என்று என் அப்பா, அம்மாவை மட்டும் அனுப்பி விட்டு, என் நண்பர்களுடன் உங்களைப் பார்க்க வந்திருக்கிறேன் என்றார்.

மேலும் எப்படியோ உங்களின் வாக்கு பலிக்கட்டும் என்னை ஆசீர்வதியுங்கள் என்று குருவை வணங்கி ஆசி பெற்றுச் சென்றார். இரண்டு நாள் கழித்து குருவை தொலைபேசியில் தொடர்பு கொண்டவர் மிக்க மகிழ்ச்சியுடன், குருவே, தாங்கள் கூறியதுபோலவே நடந்து விட்டது. 38 வது பெண்ணை நான் பார்க்காமலே எனக்கு பெண் பேசி முடித்துவிட்டார்கள். அடுத்த மாதமே திருமணம். நீங்கள் அவசியம் வந்திருந்து வாழ்த்த வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். குருவும், திருமணத்திற்குச் சென்று கலந்து கொண்டு மனமக்களை மனதார வாழ்த்திவந்தார்.

– தொடரும்

"ஸ்ரீ பாத ராஜம் சரணம் ப்ரபத்யே"

சமர்த்த சத்குரு வீரடி சாய் மஹராஜின் க்ருபையாலும், கலியுக பரிபூரண தத்த அவதாரியான, ஸ்ரீபாத ஸ்ரீவல்லபர் அனுக்கிரகத்தினாலும், கலியுகத்தில் இருந்து மீண்டும் சத்ய யுகம் உருவாக ஸ்ரீ வல்லபர் மீண்டும் அவதாரம் செய்து, உயிர்கள் அனைத்திற்கும் நல்லருள் பொழிந்திட, சுவாமியின் நாம ஜபம் ஒன்றே முழுமையான பாதுகாப்பு கருவியாகும்.



"திகம்பரா திகம்பரா ஸ்ரீ பாத ஸ்ரீ வல்லப திகம்பரா"

"திகம்பரா திகம்பரா ஸ்ரீ சக்ரதத்தாத்ரேயா திகம்பரா"

– எனும் சக்தி வாய்ந்த நேர்மறை ஆற்றலைக் கூட்டும் மாமந்திரத்தை தினமும் "108" முறையாவது ஜபம் செய்து, எதிர்மறை சக்தியின் தாக்கத்தில் இருந்து தற்காப்பு பெற்றிடுவோம் வாருங்கள் நண்பர்களே!

"ஜய ஜய ஸ்ரீ பாத ஸ்ரீ வல்லபா"

விபரங்களுக்கு; சுந்தர்சாய், 9789404451

தொடர் –58

குருவைத் தேடி

பேரூந்து புறப்பட்டபோது பேரூந்தில் ஏழு பயணிகள் மட்டுமே இருந்தோம்.

அந்தப்பேரூந்து சீரடிக்கு, அகமது நகர் வழியாக செல்லாமல், சங்கம்நேர் வழியாக சுற்றிச் செல்லும் என்பது அப்போது எனக்குத் தெரியாது.

(தற்போது அகமதுநகர் வழியை விட சங்கம்நேர் வழி மிகச்சிறப்பாக அமைக்கப்பட்டுள்ளது)

நடத்துனரிடம் பயணச்சீட்டு வாங்கிக்கொண்டு, சுற்றும் முற்றும் திரும்பிப் பயணிகளைப் பார்த்தேன். கடும் குளிரின் காரணமாகஅனைவரும் கண்களைத்தவிர அனைத்தையும் குல்லா, ஸ்வெட்டர் மூலம் மூடியிருந்தனர். நான் ஒருவன் மட்டுமே குல்லா, கோட் போன்றவை அணியாமல் வேஷ்டி, சட்டையுடன் சாதாரணமாக இருந்தேன்.

பேரூந்து புறப்பட்டு அரை மணி நேரம் ஆகியும் ரோட்டில் பனிமூட்டம் விலக வில்லை. ஏதோ காட்டுக்குள் பயணிப்பதைப் போன்று இருந்தது. எனக்கு முன்பின் அறிமுகமில்லாத நபர்கள், புரியாத பாஷை, தெரியாத பாதை, ஏதோ இனம்புரியாத அச்சம் மனம் முழுவதும் நிரம்பியிருந்தாலும், "பாபா" என்ற ஒற்றைச் சொல் மட்டும் எனக்குள் எவரெஸ்ட் அளவிற்கு நம்பிக்கை அளித்துக் கொண்டிருந்தது.

காலை மணி ஏழு ஆகியிருந்தது. இன்னும் பனிமூட்டம் விலகவில்லை. பேரூந்து முப்பது கிலோ மீட்டர் கூட செல்லவில்லை. அதற்குள்



ஐந்து நிறுத்தங்களில் நிறுத்தப்பட்டு ஒரிரெண்டு பயணிகளை ஏற்றிக்கொண்டது.

சின்ன, சின்ன கிராமங்களும், கரடு முரடான சாலை ஓரத்து தேனீர் கடைகளும், அதன் வாசலில் குத்துக்காலிட்டு அமர்ந்து புகைபிடித்துக் கொண்டிருக்கும் கிராமத்து மனிதர்களும், தலையில் குல்லாயுடன், தார்பாய்ச்சிய வேட்டியுடனும் அழுக்கான தோற்றத்துடன் பால்கேனுடன் நிற்கும் பால் காரர்களும், பேரூந்து நின்றவுடன் அதிகாலை வேலையிலேயே வடபாவ் விற்கும் நடைமேடை வியாபாரிகளும், என் புண்பட்ட உள்ளத்திற்கு சற்றே வித்தியாசமாகவும், ஆறுதலாகவும்,

இருந்தது.

என் மனம் துன்பங்களை மறந்துவிட்டு இக்காட்சிகளில் கரைந்து போனது. ஆறாவது நிறுத்தத்தில் நின்ற பேரூந்து, மீண்டும் புறப்பட்ட பத்தாவது நிமிடம் தன் வேகத்தைக் குறைத்துக் கொண்டு ஊர்ந்து போக ஆரம்பித்தது. பேரூந்தில் இருந்த சொச்ச பயணிகளும் மராட்டியில் ஏதோ முனக ஆரம்பித்தார்கள். தட்டுத்தடுமாறி சென்ற பேரூந்து சற்று நேரத்தில் மொத்தமாக ஒரு பெரிய சத்தத்துடன் நின்று போனது.

நடத்துனரும், ஓட்டுனரும் பேரூந்தின் இன்ஜினை திறந்து பார்த்துவிட்டு உதட்டை பிதுக்கிக் கொண்டனர். சற்று நேரத்தில் பயணிகளிடம் நடத்துனர் ஏதோ மராட்டியில் கூற பயணிகள் அலுத்துக்கொண்டு பேரூந்தைவிட்டு கீழிறங்கினர். நானும் பையை எடுத்துக்கொண்டு கீழே இறங்கினேன். கடுமையான பனி, அது ஒரு மலைப் பகுதி. பேருக்கு ஒரு மரத்தைக் கூட காணோம். கண்ணுக்கெட்டிய தூரம் வரை ஒரே பொட்டைவெளி.

பயணிகள் நடத்துனரிடம், மராட்டியில் மாற்றி மாற்றி ஏதோ பேசிக்கொண்டும் வாக்குவாதம் செய்து கொண்டும் இருந்தார்கள். மொழி புரியாவிட்டாலும் அங்கு நடப்பதை ஒருவாறு ஊகித்துக் கொண்டேன். பேரூந்து பழுதாகி விட்டதால் இனி புறப்படாது என்பதே அது. பயணிகளை வேறு பேரூந்தில் ஏற்றிவிடுவதற்காக நடத்துனர் சாலையில் நின்று வேறு பேரூந்து வருகிறதா என்று பார்த்துக் கொண்டிருக்கின்றார். இந்தியா முழுவதும் இதே நிலைதான் போலும் என்று மனம் சற்றே ஆறுதல் அடைந்தது.

நான் என் விதியை நொந்து கொண்டு பயணிகளுடன் நடு ரோட்டில் நின்று கொண்டிருந்தேன். அரை மணி நேரம் ஆயிற்று, பேரூந்து ஒன்று வர நடத்துனர் பேரூந்தை நிறுத்தி இரண்டு பயணிகளை மட்டும் அதில் ஏற்றிவிட்டார்.

நான் நடத்துனரிடம், சீரடி, சீரடி என்றேன். நடத்துனர் நய், நய் என்றார். நான் புரிந்துகொண்டு ஒதுங்கிக் கொண்டேன். அடுத்த அரை மணிநேரம் கழித்து ஒரு பேரூந்து வர அதில் மிச்ச பயணிகளும், நடத்துனரும் ஏறிக்கொள்ள நானும், ஓட்டுனரும் மட்டும் ரோட்டில் நின்று கொண்டிருந்தோம்.

நான் மீண்டும், ஓட்டுனரிடம் சீரடி என்றேன். எனக்குத் தெரிந்த ஒரே மொழி, ஒரே வார்த்தை அதுமட்டும் தான். அவர் "ஏக் கண்டாமே வெயிட் கரோ. சீர்டிக்கா காடி ஆயா" என்று கூறிவிட்டு பேரூந்தில் ஏறி சீட்டில் படுத்துக் கொண்டார்.

எனக்கு எதுவும் புரியவில்லை. அதுவரை குளிர் தெரியாமல் இருந்த எனக்கு இப்போது குளிர் தெரிய ஆரம்பித்தது. கால்கள் சற்றே நடுங்க, மனமோ, "பாபா என்னை இப்படி தவிக்க விட்டுட்டீங்களே" என்று அரற்றியது.

அப்போது பாபா என்பவர் எனக்கு புதிதாய் அறிமுகமான நண்பர் போன்று. அவரது பெயரைத்தவிர வேறு ஏதும் எனக்கு பரிச்சியம் இல்லை. ஆனால் பாபாவிற்கு எனது கீழான பல சென்மங்களைப் பற்றி தெரியுமல்லவா? ஆகையால் எனது கர்மாவின் பொருட்டு எனது பயணத்தில் என்னுடன் விளையாட ஆரம்பித்தார். அதை புரிந்து கொள்ளும் அளவிற்கு அப்போது பாபாவுடன் அவ்வளவு நெருக்கம் இல்லை.

ஆனால் எனக்குள் ஒரு விசேஷ சக்தியை இயற்கை கொடுத்திருந்தது என்று நம்புகிறேன். எப்படிப்பட்ட குழப்பமானாலும் சரி, துன்பமானாலும் சரி, உடனே அதில் இருந்து எப்படி வெளியே வருவது என்று என் மனம் கணக்குப் போடுமே அன்றி அந்தக் குழப்பத்திலேயே என் மனம் நிற்காது.

இரயிலில் சந்தித்த டிப்டாப் ஆசாமி சீரடிக்கு அரைமணி நேரத்திற்கு ஒரு பேரூந்து புறப்படும் என்று கூறினாரே, ஆனால் இங்கு இரண்டு மணி நேரம் ஆகியும் இதுவரை இந்த ரோட்டில் வேறு பேரூந்து வரவில்லையே என்று சிந்தித்தேன். அது உண்மைதான் ஆனால் அகமதுநகர் வழியில் தான் அடிக்கடி சீரடிக்கு பேரூந்து உண்டு என்பதை பிறகு தெரிந்து கொண்டேன்.

காலை மணி 9 ஓட்டுனர் பேரூந்தில் ஏறி படுத்தவர்தான் குறட்டை விட்டு தூங்க ஆரம்பித்துவிட்டார். நடத்துனரும் வந்தபாடில்லை. லேசாக சூரியன் தலை காட்டியது. பேரூந்தை தவிர வேறு ஏதேதோ வாகனங்களும் இரண்டு சக்கர வாகனங்களும் அந்த வழியாக விரைந்து கொண்டிருந்தன.

தேனீர் குடிக்கலாம் என்றால் கண்ணுக்கெட்டிய தூரம்வரை சிறு பெட்டி கடைகள்கூட தென்படவில்லை.

மனமோ சற்று நடந்துதான் பார்ப்போம் ஏதாவது கடைகள் தென்படுகின்றா என நினைக்கும் நேரத்தில் என் கால்கள் தாமாக நடக்க ஆரம்பித்தன. பேரூந்தை திரும்பிப் திரும்பிப் பார்த்துக் கொண்டே நடந்தேன். வெகுதூரத்தில் சாலையோரத்தில் சின்ன கடையைப் போன்று ஏதோ தெரிந்தது. கடை வாசலில் காவிக்கொடி பறந்து கொண் டிருந்தது. நான் தீர்மானமாய் அதை நோக்கி நடக்க ஆரம்பித்தேன். பேரூந்து என் கண்களில் இருந்து மறைந்து விட்டது.

நான் கடையை நெறுங்கியபோது தான் தெரிந்தது. அது கடை இல்லை. யாரோ வழிப்போக்கர்கள் தார்பாயால் கூடாரம் அமைத்திருந்தார்கள். வாசலில் ஒரு பழைய இருசக்கர வாகனம் நின்றிருந்தது. நான் கூடாரத்தை நெருங்கியபோது காவிக்கொடியில் பாபா படத்தைப் பார்த்தேன். மனம் ஏதோ சற்று நிம்மதியாக இருந்தது. அங்கிருந்த இருவர் நெருப்பு மூட்டி தேனீர் தயாரித்துக் கொண்டிருந்தனர். என்னைப்பார்த்தும் கன்னடத்தில், எங்கே செல்கின்றீர்கள் என்று கேட்டார்கள்.

நான் எனக்குத் தெரிந்த மொழியை எல்லாம் கலந்து சீரடிக்குச் செல்ல பேரூந்து ஏறினேன். பேரூந்து பழுதாகிவிட்டது. என்ன செய்வதென்று தெரியவில்லை. பேரூந்து அங்கு நிற்கின்றது. என்றேன் குளிரில் நடுங்கிக் கொண்டே

அவர்களோ, நீங்கள் தமிழா என்று கேட்டுக் கொண்டே எனக்கு ஒரு கோப்பை தேனீர் தந்தார்கள். நான் ஆமாம் என்றபடி அதை உடனே வாங்கி அருந்தினேன். குளிருக்கு இதமாக இருக்க அவர்களை சிநேகமுடன் பார்த்தேன்.

அவர்கள் என்னிடம் கன்னடம், ஆங்கிலம் கலந்து ஒருவழியாக அவர்களது கதையை விளக்கினார்கள். அவர்கள் சீரடி சாய்பாபாவின் பரமபக்தர்கள். விவசாயிகள். படிப் பறிவு கிடையாது. கர்நாடகாவில் உள்ள தாவண்கரே என்ற ஊரைச் சேர்ந்தவர்கள். பாபாவை தரிசிக்க அங்கிருந்து இருசக்ர வாகனத்தில் பயணப்படுகிறார்கள். இது அவர்களுக்கு மூன்றாவது பயணமாம்.



நேற்றிரவு குளிர் அதிகமாக இருந்ததினால் கூடாரம் அடித்து தங்கியிருக்கின்றார்கள். அந்த ஊரின் பெயர் சிஞ்ச்வாகு என்பதாகும். என்று கூறினார்கள்.

பேசிக்கொண்டே அவர்கள் புறப் படத்தயாரானார்கள். கூடாரத்தை மடித்து வண்டியில் ஏற்றிக்கொண்டு புறப்படும்போது, என்னிடம், வேண்டுமானால் இந்த வண்டியில் சற்று அனுசரித்துக்கொண்டு வருகிறீர்களா அருகில் இருக்கும் ஏதாவது பேரூந்து நிலையத்தில் உங்களை இறக்கி விடுகிறோம் என்றனர்.

எனக்கும் அது சரி என்று பட்டது. ஆனால் அந்த இருவருக்கும், கூடாரத்திற்கும் தான் வண்டியில் இடம் இருந்தது. இருந்தாலும் என் மனம் சற்றும் யோசிக்காமல் சரி என்றது. அவர்கள் மிகவும் சிரமப்பட்டு என்னையும் ஏற்றிக்கொண்டனர். வண்டியின் முன்னால் சாயி பாபாவின் கொடி பறக்க ஊர்ந்து செல்ல ஆரம்பித்தோம். ஒரு மணிநேரப் பயணத்திற்குப் பின் ஷேக்கான் என்ற ஊரை அடைந்தோம்.

என்னை அங்கு இறக்கிவிட்ட அவர்கள் பாபாவின் அனுக்கிரகம் இருந்தால் சீரடியில் சந்திப்போம் என்று கூறி விடைபெற்றுச் சென்றனர். நான் அங்கிருந்த சிறிய பேரூந்து நிலையத்தில் காத்திருக்க ஆரம்பித்தேன். பேரூந்துகள் வருவதும் போவதுமாக இருந்தன. எந்த பேரூந்து சீரடி செல்லும் என்று தெரியவில்லை. மருந்துக்குக்கூட மராட்டியயை தவிர வேறு மொழியில் ஒரு விளம்பரப் பலகைகூட இல்லை.

சற்று நேரத்தில் சாயிபாபாவின் படத்தை ஒட்டிபடி ஒரு பேரூந்து வர நான் தீர்மானமாய் இது சீரடி செல்லும் பேரூந்துதான் என நினைத்து அதில் ஏறிக்கொண்டேன். நடத்துனரிடம் சீரடி என்று கூறி பயணச்சீட்டு கேட்க , அவரோ என்னிடம் பணத்தை வாங்கிக்கொண்டு எதுவும் கேட்காமல் ராஜ்கூர்நகர் என்று மட்டும்கூறி டிக்கெட் கொடுத்துவிட்டு சென்று விட்டார். பிறகுதான் தெரிந்தது அது சீரடி கனெக்சன் பேரூந்து என்பது.

ஒருவழியாக ராஜ்கூர்நகர் வந்து சேர மதியம் ஆகிவிட்டது. அங்கிருந்த ஒரு உணவகத்தில் சப்பாத்தி சாப்பிட்டு விட்டு எதிரே இருந்த மரநிழலில் இருந்த கல்லில் சற்று ஓய்வாக அமர்ந்தேன். சே! எப்போது நாம் சீரடி செல்வோம். இன்றைய நாள் ஏன் இப்படிப் போகிறது. என்றவாறு மனம் அலுத்துக்கொண்டது.

அரைமணிநேரம் போயிருக்கும். எனக்குள் பழைய ஞாபகங்கள் சுழன்று அடிக்கத்துவங்கியது. நான் ஏன் சீரடி வரவேண்டும் என்று முடி வெடுத்தேன். அது சரியா, தவறா, பதிமூன்று வயதில் இருந்து என்னை வழிநடத்திச் சென்ற எனது குருநாதர்கள் எங்கே போனார்கள். அவர்கள் ஏன் என்னை மறந்து போனார்கள்.

இல்லை நான்தான் அவர்களை மறந்து விட்டேனா?

என்னுடைய ஆன்மீகப் பயிற்சிகள் முறையாக, சரியானதாக இருக்குமானால் நான் ஏன் இவ்விதம் கஷ்டங்களை அனுபவிக்க வேண்டும். ஒரு சற்குருவைத்தேடி செல்லும் வழி தவறாகுமா? அது நல்ல வழிதானே! ஆனாலும் அதிலும் இவ்வளவு சோதனைகள் தகுமா?

எவ்வளவு சோதனைகள் வந்தாலும் சரி அதையெல்லாம் தாண்டிப் போக நான் தயாராக இருக்கிறேன். ஆனால் அங்கு சென்றதும் சற்குருவின் பார்வை என்மீது படுமா? அதற்கு என்ன உத்திரவாதம். என் வாழ்க்கைப் பயணம் தான் வழிதெரியாமல் திக்கித் திணறுகிறது. எனது ஆன்மீகப் பயணமாவது எங்காவது ஒரு நல்ல இடத்தில் முடியாதா?

இன்னும் எவ்வளவு தூரம்தான் பயணிப்பது. எங்கே முடியும். எப்படி முடியும். முடிவதுபோல் இருக்கும் பயணம் கண்ணாமூச்சி காட்டிக்கொண்டே தொடருகிறதே! நான் என்ன செய்வேன். என்னால் முடியவில்லை இறைவா! என்றவாறு உள்ளுக்குள் புலம்பித்தவித்தேன்.

அப்படியே சிறிது நேரம் கண்களை மூடியபடியே அமர்ந்திருந்தேன். இரவில் குளிர் அதிகமாக இருப்பதைப் போன்றே, பகலில் வெய்யிலும் கடுமையாக இருந்தது. அப்போது, "தம்பி சீரடிக்கு பஸ் வருது பாருங்க" என்றொரு தமிழ்க்குரல் கேட்டது. நான் குரல்வந்த திசையை பார்க்காமல் பேரூந்து நிலையத்தைப் பார்த்தேன். அப்போதுதான் பேரூந்து நிலையத்தில் இருந்து ஒரு பேரூந்து வெளியேறிக் கொண்டிருந்தது.

அந்த பேரூந்து சீரடி போகுமா என்று எனக்குத் தெரியாது. எனக்கு கேட்ட குரலை மட்டும் நம்பிக்கொண்டு நான் அந்த பேரூந்தில் ஏறுவதற்கு ஓடுகிறேன். ஆனால் அதிவேகமாக அந்த பேரூந்து சென்று விட்டது. சற்று தூரம் பின்னாலேயே ஓடிப்பார்த்து விட்டு, மீண்டும் நான் அமர்ந்த இடத்திற்கே வந்தேன். நான் அமர்ந்திருந்த இடத்தில், இரண்டு கால்களும் இல்லாத ஒரு சாது அமர்ந்திருந்தார்.

நான் அவரிடம் இருந்து சற்று தள்ளி போய் நின்று கொண்டேன். ஆனாலும் அவர் என்னைப் பார்த்து, பார்த்து சிரித்துக்கொண்டே இருந்தார். சிறிது நேரம் கழித்து என்னைப் பார்த்து, தம்பி இங்கே வாங்க என்றார். எனக்கோ வியப்பு அய்யா நீங்க தமிழா என்றபடி அவரிடம் சென்றேன்.

ஆமாம், என்றவர் நான்தான் சீரடி பஸ் வருகிறது என்று குரல் கொடுத்தேன். ஆனால் நீ குரல் எங்கிருந்து வருகிறது என்று கவனிக்க முயற்சிக்கவில்லை. பேரூந்தை நோக்கித்தான் மனம் ஓடியது இல்லையா, ஆனால் நீ குரல் வந்த திசையை கவனித்திருந்தால் உனக்கு சரியான விபரத்தை நான் கூறியிருப்பேன். இப்போது கூறுகிறேன் கேட்டுக்கொள். சீரடி செல்லும் பேரூந்து இப்போதுதான் வந்து பேரூந்து நிலையத்திற்குள் நிற்கிறது. அது புறப்பட இன்னும் ஒரு மணி நேரம் ஆகும். என்று சிரித்தார்.

மேலும், உன்னைச்சொல்லிக் குற்றமில்லை. மக்கள் அனைவரும் இப்படித்தான் ஆட்டு மந்தைகளைப் போல் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். நீ துரத்திச்சென்ற பேரூந்து வேறு ஊருக்குப் போகிறது. நல்லவேளை நீ அதில் ஏறவில்லை. ஏறியிருந்தால் என்னவாகியிருக்கும் என்றார் சாது.

- (தொடரும்)

ஓம் சாய்ராம்

வாழ்வை வளமாக்கும் இனிய சாயி லிகித ஜபம்

சாய் அன்பர்களுக்கு பணிவான வணக்கத்துடன்...

ப்ரபஞ்சத்தின் ஆற்றல்மிக்க சக்தி ஸ்வரூபனான நம் அன்பு சாய் மஹராஜ் க்ருபையினால் நமக்கு அளிக்கப்பட்ட திரு மந்த்ரமான,

"ஓம் ஸ்ரீ சாய் ராம ஜயம்" என்ற

சக்தி வாய்ந்த லிகித நாம ஜபம் தினமும் 108 முறை யாவது மனம் ஒன்றி எழுதி நமது கர்ம வினைகளின் தாக்கத்தில் இருந்து, தற்காப்பு செய்து கொள்வதுடன், நமது அனைத்து காரியங்களிலும், பேரொளியாய் சாய்நாதர் வழி காட்டி, பரிபூரணமாய் நம்மை ஆசீர்வதிக்க ப்ரார்த்திப்போம் வாரீர்.



'லிகித நாம ஜபம் மனித குலத்திற்கு மாமருந்து'

தொடர்புக்கு;

சுந்தர்சாய், செல்: 9789404451

என்னருகே நீ இருப்பாய்!



அமிதாஸ் பவானி மேத்தாவின் சமாதி லெண்டித்தோட்டத்தின் மத்தியில் அமைந்துள்ளது. அவர் சௌராஷ்டிராவில் கத்தியவாரின் பாவ்நகர் பகுதியில் வசித்தவர். அமிதாஸின் வம்சம், புகழ்பெற்ற கிருஷ்ண பக்தரான நரசிங் மேத்தாவின் வழிவந்ததாகும்.

அமிதாஸ் மிகவும் புலமை வாய்ந்த கவிஞராகவும், மிகப்பெரிய கிருஷ்ண பக்தராகவும் விளங்கினார். தினந்தோறும் மிகுந்த பக்தியோடு அவர் தம் இறைவனான கிருஷ்ண பரமாத்மாவை மனமுருகி வழிபட்டு வந்தார்.அவர் ஒவ்வொரு முறையும் கிருஷ்ணனை படத்தில் தரிசிக்கும் போதும், கிருஷ்ணரின் உருவத்திற்கு மேல் படர்ந்தபடி ஒரு முகம்மதிய பக்கீரின் உருவம் கண்ணாடி பிரேமிற்குள் தெரிந்தது.

தான் வழிபடும் கிருஷ்ண பரமாத்மாவின் உருவத்திற்கு மேல் ஒரு முகம்மதிய சன்னியாசியின் உருவம் படர்ந்து காட்சியளிப்பதைக் கண்டு அமிதாஸ் மிகவும் குழப்பமடைந்தார். அதே நேரத்தில் அது அவரது ஆர்வத்தை தூண்டியது. எனவே, அந்த முகமதிய சன்னியாசி யார் என்று கண்டறிய முற்பட்டு, அது சீரடி ஸ்ரீ சாய்பாபாவே என்று விசாரித்து அறிந்துகொண்டார்.

அமிதாஸ் கல்வி, கேள்விகளில் மிகவும் சிறந்தவராவார். அது மட்டுமல்ல அவர் இந்திய பாரம்பரிய இசையை முறைப்படி பயின்றுள்ளதோடு, குரல் இசையிலும் சிறந்து விளங்கினார். அமிதாசுக்கு செல்வச் செழிப்பிற்கும் குறைவேயில்லை.

அவர் கத்தியவாரைச் சேர்ந்த ஒரு சிறிய மன்னரான தயாஷங்கர் ரேவாஷங்கர் பாண்டியா என்பவரால் ஆதரிக்கப்பட்டார். அந்தக் காலத்தில் சிறு, சிறு ராஜ்யங்களாக பிளவுபட்டுக் கிடந்த கத்தியவாரனது குஜராத்தி நவாப்புகளால் ஆளப்பட்டு வந்தது.

செல்வந்தரான அமிதாஸ் அடிக்கடி சீரடிக்கு வந்து பாபாவை தரிசிப்பார். அப்போது சீரடியில் ஒரு அறையை தனியே வாடகைக்கு எடுத்து தங்குவது அவரது வழக்கம். எனவே மிக நீண்ட காலங்கள் கூட அவரால் சீரடியில் தங்க முடிந்தது. அப்படி சீரடியில் தங்கும் போதெல்லாம் பெரும்பான்மையான நேரத்தை பாபாவுடனே செலவிட்டார்.

அமிதாஸ் தன்னுடைய தாய்மொழியான குஜராத்தியில் பாபாவைப் பற்றி எழுத ஆரம்பித்தார். இதன் பயனாக பாபாவின் புகழ் குஜராத் எங்கும் பரவிற்று. அமிதாஸ்

ஒரு புலமை வாய்ந்த கவிஞர் என்பதால், பூரண பரப்பிரம்மமான சாயிபாபாவின் வாழ்க்கை, அவரின் பழக்க வழக்கங்கள், குணநலன்கள் ஆகியவற்றை நயம்படக் கவிதை வடிவில் புனைந்துள்ளார்.

மேலும் அவர் பாபாவுடன் மிக நெருக்கமாக பழகியதால் அவரால் பாபாவைப் பற்றி " பூர்ண பரப்பிரம்ம ஸ்ரீ சற்குரு சாய்நாத் மகராஜ்னி ஞானவாஜோக் விகதோ தேமாஜ் சமத்காரோ" என்ற ஒரு அற்புதமான நூலைப் படைக்க முடிந்தது.

அமிதாஸின் நற்குணங்களால் அவர் பாபாவின் அன்பிற்கு பாத்திரமாக இருந்தார். சீரடியில் யாருக்காவது உடல் நிலை சரியில்லாமல் போனால், பாபா அந்நோயா ளியை அமிதாஸிடம்தான் அனுப்பி வைப்பார்.

அமிதாஸ்-ஓம் சற்றும் முகம் கோணாமல் பரிவுடன் அந்நோயாளிக்கு பணிவிடைகள் செய்து அவர் பூரண உடல்நலம் பெற உதவிடுவார். அமிதாஸின் ஒரே ஆசையானது தான் இறக்கும்போது சீரடியில், தனனுடைய குருவின் அருகிலேயே தன் உயிர் போக வேண்டும் என்பதுதான்.

அவரது ஆசையை நன்கு அறிந்திருந்த பாபா அவரிடம், "நீ எங்கு இறந்தாலும் எப்போதும் என்னுடனே இருப்பாய்" என்று திருவாய் மலர்ந்தார். அவருடைய ஆசைபடியே அமிதாஸ் சீரடியிலேயே தனது கடைசி மூச்சை விட்டார். அவரது சமாதியானது லெண்டித்தோட்டத்தில் முக்தாராமின் சமாதிக்கு அருகாமையில் அமைந்துள்ளது.

சீரடி செல்லும் பக்தர்கள், இக் கண்ணிய வானை தொழ தவறாதீர்கள்.

ஜெய் சாயிராம்!

ஆனந்தம்



உங்களைச் சுற்றியுள்ள மக்கள் கோழைகள். அவர்களை பற்றி கவலைப்பட வேண்டாம்! உங்கள் வழியில் செல்லுங்கள்! ஆனந்தமாக நடனமாடியபடியே உங்கள் வழியில் செல்லுங்கள்!

ஒன்றை மட்டும் நினைவில் வையுங்கள். எது நன்றாகத் தோன் றுகிறதோ அதுவே நல்லது! எது அழகாகத் தோன்றுகிறதோ அதுவே அழகானது! மேலும் எது உங்களை மகிழ்ச்சியாக, ஆக்குகிறதோ அதுவே உண்மை!

அது மட்டுமே உங்கள் அளவுகோ லாக இருக்கட்டும்! மற்றவர்களின் கருத்துக்களால் ஒருபோதும் கவலைப் பட வேண்டாம்!

இது உங்களின் ஒரே எல்லையாக இருக்கட்டும்! எது உங்களுக்கு மகிழ்ச்சியைத் தருகிறதோ அதுவே உண்மையாக இருக்கும்! ஆனந்தம் ஒன்றே உண்மையின் அளவுகோல்.



கோபால் ராவ் பூட்டி

சீரடியில் நாம் சென்று வணங்கும் சமாதி மந்திரை கட்டியவர். சீரடிக்கு வரும் ஒவ்வொரு பக்தரும் இந்தக் கட்டிடத்தில் உள்ள பாபாவின் ஆளுயர சிலையையும், பாபாவின் சமாதியையும் தவறாமல் வணங்குவார்கள். நாக்பூரில் 1873 ல் பிறந்த கோபால் ராவ் பூட்டி, தன் 15 வயதிலேயே சீரடி சாய்பாபாவின் சமகாலத்து மகானாகிய கஜானன் மகாராஜை தரிசிக்கும் வாய்பை பெற்றவர்.

திரு. எஸ்.பி. துமால் என்பவர், பூட்டியை 1908 ம் ஆண்டு வாக்கில் சீரடிக்குக் கூட்டிச் சென்றார். பாபாவின் தெய்வீக உருவைக் கண்டு திரு. பூட்டி மெய்சிலிர்த்து போனார். அதன் பிறகு தன் குடும்பத்தாருடன் பலமுறை சீரடிக்கு வருகை தந்தார். அங்கு மக்கள் தங்குவதற்காக இரண்டு வாடாக்களே இருந்ததால் தான் தங்கவும் ஏற்ற வகையில் ஒரு வாடாவை கட்ட விரும்பினார்.

தன் கனவில் பாபா ஒரு வீடு கட்டும்படி கூறியதாக கண்டார். அதே இரவு மாதவ் ராவ் தேஷ்பாண்டேக்கும் அதே கனவு தோன்றியது.

கட்டிட வரை படத்தை தயார் செய்து கொண்டு இருவரும் பாபாவை சந்திக்கச் சென்றார். பாபா வரைபடத்தை பார்த்து தன் சம்மதத்தை தெரிவித்தார். கட்டிடத்தின் நடுவில் ஸ்ரீ கிருஷ்ணரின் சிலை வைக்கவும் கூறினார். மாதவ் ராவ் அன்று நல்ல முகூர்த்த வேளையாதலால் தேங்காய் உடைத்து வேலையை ஆரம்பித்தார். கட்டிடம் முடியும் தருவாயில் பாபா உடல் நலம் குன்றியது. தான் மகாசமாதியடையப் போகும் சில நிமிடங்களுக்கு முன்னால் தன்னை அந்தக் கட்டிடத்திற்கு கொண்டு செல்லும்படி கூறினார்.

மகாசமாதி அடைந்தவுடன் அவர் பூத உடல் அந்த கட்டிடத்தில் அடக்கம் செய்யப்பட்டது. கருங்கல்லால் கட்டப்பட்டிருப்பதால் 'தக்தி' வாடா என்றும், பூட்டி வாடா என்றும் சமாதி மந்திர் கட்டிடம் அழைக்கப்படுகிறது.



பி.வி. தேவ்

இவர் "பாபாச்சே பால்" (பாபாவின் குழந்தை) என்ற பெயரில் அநேக கட்டுரைகள் எழுதியிருக்கிறார். பாபாவின் மீது ஆர்த்தியின் போது பாடப்படுவதற்காக ஒரு பாடலும் இயற்றியிருக்கிறார். ஹேமாத் பந்த் இயற்றிய "ஸ்ரீ சாய் சத் சரிதாவில்" 53ம் அத்யாயத்தை எழுதியுள்ளார். கடைசி அத்யாயமான இது 52 அத்யாயங்களில் கூறப்பட்டுள்ளதை ஒவ்வொரு அத்தியாயமாக சுருங்கக் கூறியுள்ளது.

ராம்கீர் என்ற பக்தர் பாபாவின் உத்தரவின் பேரில் ஆர்த்தி பாடலையும் உதி பொட்டலம் ஒன்றையும் ஜாம்நேர் நகரில் பிரசவ வலியால் துடிதுடித்துக் கொண்டிருந்த நாநா சந்தோர்கரின் மகள் மீனத் தாயிடம் கொடுத்த நிகழ்ச்சி, மற்றும் பாபா நாநா சந்தோர்கருக்கு பகவத் கீதையின் ஒரு ஸ்லோகத்தின் பொருளை விரிவாக விளக்கியது பற்றியும் சுவைபடக் கூறியுள்ளார். பாபா கூறிய வேதாந்த கருத்துக்கள் பற்றி விரிவாக விளக்கி அநேக கட்டுரைகளை எழுதியுள்ளார். குறிப்பாக பாபா தட்சிணை கேட்டதன் முக்கியத்துவம் பற்றி விரிவாகக் கூறியுள்ளார். ஸ்ரீ சாயி சத் சரிதம் அத்தியாயத்தில் இவரைப் பற்றிய நிகழ்ச்சி ஒன்று கூறப்பட்டுள்ளது.

எலைட் எண்டர்பிரைசஸ்

தொப்பம்பட்டி பிரிவு, HDFC பேங்க் அருகில், MTP ரோடு,
கோயம்புத்தூர் - 641 017. செல்: 98434 40806

Authorized Distributor: GS Caltex

Authorized Dealer:
Castrol | SERVO | MAK LUBRICANTS | Shell Lubricants | MOTUL | AMARON | SF SONIC

GST No: 33BMOPS1392A1Z3

ELITE ENTERPRISES









GS Caltex
Castrol

P.Sivasaravanan B.E.,
98434 40806

Products

- Automobile Engine Oils
- Hydraulic Oils
- Gear Oils
- Compressor Oils
- Cutting Oils
- Greases-Industrial
- Greases-Automobile
- Brake Oil
- Coolant Oil

ELITE ENTERPRISES

All Two Wheeler & 4 Wheeler Batteries Available Here

SF SONIC
AMARON
LASTS LONG, REALLY LONG.









HOME UPS AVAILABLE

ஆட்டோ மொபைல் ஆயில், இண்டஸ்ட்ரியல் ஆயில், க்ரீஸ், இரண்டு மற்றும் நான்கு சக்கர வாகன பேட்டரிகள், வீட்டு உபயோக UPS, பேப்பரிகள் கிடைக்கும்.

தொடர் –22

சாய் சரவணன்

"அதி தேவதை"

அன்னை, மகல்சாபதியிடம் நன்மதிப்பு வைத்திருந்தாள். மகல்சாபதியிடம் பாபாவிற்கு சர்வ மங்களமான வஸ்துக்களை சமர்ப்பணம் செய்யுங்கள் என்றும், அவரது திருவடிக்கு அர்க்ய, பாத்ய பூஜைகள் செய்து அந்த தீர்த்தத்தை பக்தர்களுக்கு தாருங்கள் என்று கூறி அவரது சேவையை மேலும் ஊக்குவித்தாள்.

அடிக்கடி மசூதியில் சாயிநாத் மகராஜ்கீ ஜெய் என்ற ஜெய கோஷம் முழுங்கச் செய்யுங்கள் என்று கூறுவாள். அப்துல், பாலாஜி போன்றோரிடம் துளசி மாலையை கட்டிக்கொடுத்து பாபாவிடம் சேர்ப்பிக்கும்படியும், பிறகு அவரது பாத பூஜை செய்த தீர்த்தத்தை பருகுமாறும் அதுவே எல்லா தீர்த்தங்களிலும் ஸ்நானம் செய்யும் பலனானது என்றும் குருவின் பாத தீர்த்தத்தை தலையில் தெளித்துக் கொண்டாலே பலன் கிடைக்கும் என்றும் கூறுவாள்.

மேலும் பாபாவின் திருவடிகளில் அத்தனை புனித தீர்த்தங்கள் இருக்கின்றன என்றும் கூறுவாள். நமது பாவத்தை நீக்கி நமக்கு ஞானமாகிய ஒளியை வழங்க வல்லது அதுவே என்றும் கூறுவாள். பக்தர்கள் அன்னை பாபாவின் மீது கொண்டிருந்த எல்லையில்லாத நம்பிக்கையைக் கண்டு வியந்து போவார்கள். தன் அன்புத்தோழியான பிக்குபாயிக்கு பாபாவின் புகைப்படத்தையும், உதி பிரசாதத்தையும் பார்சலில் அனுப்பி சீரடிக்கு பாபாவை தரிசிக்க வரும்படி



கடிதம் எழுதினாள் அன்னை.

சீரடி கிராமத்தில் நடக்கும் உருஸ், சந்தனக்கூடு, கொடி ஊர்வலம் போன்றவை நாளடைவில் பெரிய அளவாக மாறத்தொடங்கியது. சீரடியில் கடைகள், சந்தைகள், உருவாகின. பாபாவை தரிசனம் செய்ய மக்கள் நாளுக்கு நாள் அதிகமாக வரத் தொடங்கினர். அப்படி வரும் மக்களைப் பார்த்து அன்னை இவர்கள் தங்குவதற்கு ஒரு இடம் கூட இல்லையே என்று வருந்துவாள்.

மேலும் வெளியூர் பக்தர்களுக்கும், உள்ளூரில் வசிக்கும் முடியாதவர்கள்,

நோயாளிகள், வயதானவர்கள், தொழு நோயாளிகள் போன்றவர்களுக்கு உண்ண உணவையும், அடிப்படை வசதிகளை உருவாக்கவும் அன்னை சிந்திக்க ஆரம்பித்தாள். இவை எல்லாம் அன்னையின் சிந்தனையில் உதித்தது என்றாலும் அவை பாபாவின் சிந்தனை இல்லாது வேறென்ன?

ஒரு முறை அன்னை குருஸ்தானைச் சுற்றி பெருக்கிக்கொண்டிருந்தபோது, வேப்ப மரத்தைச் சுற்றி காலியான இடங்கள் நிறைய இருப்பதைக் கண்டாள். அதில் பக்தர்கள் தங்குவதற்கு வாடா ஒன்று கட்டினால் நன்றாக இருக்குமே என்று சிந்தித்தாள்.

ராவ் பகதூர் ஹரிவிநாயக் சாதே என்பவரை சாயிநாதர் 1904 ஆம் ஆண்டு சீரடிக்கு இழுத்தார். அவர் பம்பாய் மாகாணத்தின் டெப்டி கலெக்டராக இருந்தார். அவரது மனைவி இறந்து விட்டார். அவருக்கு பெண் குழந்தைகளே இருந்தன. ஆண் குழந்தை இல்லை.

1904 ஆம் ஆண்டு சாதே அவர்கள் அகமதுநகர் கலெக்டராக இருக்கையில் மம்லத்தராக இருக்கும் பார்வா என்பவர் பாபாவை பற்றிக்கூற, இருவரும் பாபாவைக் காண சீரடிக்குச் சென்றனர். பாபா சாதேவைப் பார்த்தும், "திருமணம் செய்து கொண்டால் இறைவன் உனக்கொரு மகனைத் தருவார்" என்று கூறினார். சாயியின் வாக்கு பலிக்கும் என்று நம்பினார் சாதே. அப்போது அவருக்கு வயது 50.

1906 ல் தாதா கேல்கர் தன் பெண்ணை சாதேவிற்கு திருமணம் செய்து வைத்தார். 1913 ல் பாபாவின் ஆசீர்வாதத்தின்படி சாதேவிற்கு ஆண் வாரிசு பிறந்தான்.

1907 ஆம் ஆண்டு சாதே சீரடிக்கு வந்திருந்தபோது, அன்னை பாபாவின் பின்னாலேயே மகராஜ், மகராஜ் என்று அழைத்துக்கொண்டே செல்வதைக் கண்டார். பாபாவும் தான் உண்ட மிச்சத்தை அன்னைக்கு கொடுத்து விடுவதையும் கண்டார். பிறகு பாபாவின் முன்னால் அமர்ந்திருந்த போது பாபா சாதேவைப் பார்த்து நீ சாலாவிற்குச் சென்று ஆயியை சந்திக்க வேண்டும் என்று கூறினார்.

சாதே தன் மாமனாருடன் சாலாவிற்கு சென்று அன்னையை சந்தித்தார். அன்னை சாதேவைப் பார்த்து, "பாபாவை காண வரும் பக்தர்களுக்காக நீங்கள் ஏன் ஒரு வீடு கட்டித்தரக்கூடாது. நீங்களும் அடிக்கடி குடும்பத்துடன் சீரடிக்கு வருகின்றீர்கள் நீங்களும் தங்கிக்கொள்ளலாமே" என்றாள்.

பிறகு சாதே தன் குடும்பத்துடன் தான் தங்கியிருந்த மண் குடிசையான வீட்டிற்கு வந்து தங்கினார். அப்போது தான் அவருக்கும் அன்னை கூறியது சரி எனப்பட்டது. உடனே தன் மாமனாரிடம் அன்னையைப் பற்றி விசாரித்தார். தாதா கேல்கர் அன்னையைப்பற்றி முழுமையாக அறிந்தவர். அவரின் தன்னலமற்ற சேவையினை சாதேயிடம் எடுத்துக் கூறினார்.

அதன்பிறகு, பாபா இதை விரும்புகிறார் என்றால் சீரடியில் பக்தர்கள் தங்குவத்றகாக பெரிய வாடா ஒன்றை கட்டலாம் என்று சாதே முடிவு செய்தார். பிறகு காலம் கூடிவர கிராமத் தலைவரின் ஒப்புதல் பெற்று, பாபாவின் அனுமதியோடு குருஸ்தானை சுற்றி உள்ள இடங்களை வாங்கி வாடாவை கட்ட முயன்ற போது, வேப்ப மரத்தின் கிளை, வேர்கள் தடையாக இருந்தது.

என்ன செய்வது என்று அறியாது பாபாவிடம் சென்று முறையிட்டனர். பாபாவே அவ்விடம் வந்து, தன்



கைகளாலேயே கிளை, வேர்களை அகற்றினார். அதன் பின்பே சாதே வாடா கட்டும்பணி தொடர்ந்தது. 1908ஆம் ஆண்டு முழுமையாக பணி நிறைவடைந்து வாடாவை பக்தர்கள் பயன்படுத்தத் தொடங்கினர்.

அன்னையின் எண்ணத்தை சாதேவின் மூலம் பாபாவே நிறைவேற்றித் தந்தார். திருவாளர் சாதேயை அன்னை சந்திக்கும்போதெல்லாம், சீரடியில் செய்யவேண்டிய சீர்திருத்தங்களைப் பற்றி கூறுவாள். " சீரடியை மிகப்பெரிய சமஸ்தானமாக மாற்ற வேண்டும் என்றும்,சாயி மகராஜிக்கு விட்டலின் வழிபாடுகளைப் போல ஆரத்தி, விழாக்கள்,பஜனை என யாவும் மாறாமல் அப்படியே சீரடியில் நடக்க வேண்டும் என்றும் செருப்பணியாத பாபாவின் பாதங்கள் நோகாமல் நாம் பார்த்துக்கொள்ள வேண்டும் என்றெல்லாம் கூறுவாள்.

ஆயி கூறுவது சாதேவிற்கு சற்று வேடிக்கையாக தான் இருக்கும். பண்டர்பூர் எங்கே? சீரடி எங்கே? என்று நினைத்துக் கொள்வார். ஆனால் பிற்காலத்தில் அன்னை கூறியதெல்லாம் நடப்பதைக் கண்டு வியக்கவும் செய்தார்.

பிக்குபாய் அன்னையின் அழைப்பை ஏற்று சீரடிக்கு பயணப் பட்டாள். சீரடியில் சுந்தராபாயி, இராதா கிருஷ்ணமாயி என்ற பெயரில் அழைக் கப்படுவது பிக்குபாயிக்கு தெரியாது. சீரடிக்கு வந்த பிக்குபாயி பாபாவின் பக்தர்களோடு மசூதிக்குச் சென்று பாபாவை வணங்கினாள். அங்கு இருந்த பக்தர்களிடையே சுந்தராபாயியை தேடினாள். உடனே பாபா பிக்குபாயைப் பார்த்து, நீ இராதாகிருஷ்ணமாயியோடு இரு என உத்தரவிட்டார்.

ஆனால் பிக்குபாயோ, நான் என் சகோதரி சுந்தராபாயுடன் தங்கலாம் என்றல்லவா சீரடி வந்தேன். ஆனால் பாபாவோ வேறு யாருடனோ அல்லவா தங்கச் சொல்கிறார் என்று குழப்பமடைந்தாள். அவளது மனதை அறிந்த பாபா, நீ தேடி வந்த சுந்தராபாயி எப்போதோ இறந்து விட்டாள் என்றார். அதைக் கேட்டு கண்கலங்கினாள் பிக்குபாய்.

அப்போது பாபா அங்கிருந்த ஒரு நபரிடம் இவளை சாலாவில் விட்டு வா என அனுப்பி வைத்தார். சாலாவில் சுந்தராபாயைக் கண்ட பிக்குபாய் ஓடிச் சென்று ஆரத்தழுவிக்கொண்டு கண்ணீர் சிந்தினாள். பிறகு அக்கா, பாபா நீ இறந்துவிட்டதாக அல்லவா கூறினார் என்றாள். அதற்கு அன்னையோ, " பாபா கூறியது சத்தியம் தான்.என்னை அவரிடம் தந்த பின் வாழ்வது அவரே, நான் இல்லை" என்றாள்.

அன்னை, பிக்குபாயிடம் அவளின் நலனை விசாரித்தாள்.அன்னை பிக்குபாயிடம் சீரடியில் தனக்கு நடந்ததை அனைத்தையும் கூறினாள். பிறகு பிக்குபாயியையும் அன்னை பாபாவின் சேவையில் ஈடுபட வைத்தாள்.

– (தொடரும்)

சிவநேசன் சுவாமி



சிவநேசன் சுவாமி தமிழ் நாட்டைச் சேர்ந்தவர். பாபாவின் தீவிர பக்தர். கோயம்புத்தூர் மாவட்டம் நாயக்கர் பாளையத்தில் பிறந்தவர். இவர் பிறந்தது ஒரு இராம நவமி நாளன்று (12.04.1927). அவர் தனிமையை விரும்பினார். வெகு தொலைவில் உள்ள தனிமையான இடங்களுக்கு சென்று தியானத்தில் ஈடுபட்டார்.

தன் தாயாரின் மறைவிற்குப் பிறகு மும்பை வந்த அவர் பல்வேறு சிறு சிறு வேலைகளைச் செய்தார். உதாரணமாக கைவண்டியில் காய்கறி, பழங்கள் விற்பது போன்றவை. மும்பையில், தமிழ் நாட்டில் உள்ள வல்லநாடு என்ற ஊரைச் சேர்ந்த முத்தையா ஸ்வாமி என்பவரிடம் சீடனாக சேர்ந்தார். தன் இதயத்தின் உள்ளே ' ஒளி 'யை காண விரும்பிய அவர் 1953 ம் ஆண்டு சீரடிக்கு வந்தார். பாபா அவரை முழுமையாக ஆக்ரமித்துக் கொண்டார்.

அதன் பின் அவர் சீரடியை விட்டு எங்கேயும் செல்லவே இல்லை. அவருக்கு பத்து மொழிகள் தெரியும். தினமும் அதிகாலை 3 மணிக்கு எழுந்து குருஸ்தானை 108 முறை வலம் வருவார். தூப் ஆரத்தி முடிந்தவுடன் சாவ டியில் சாயி பஜனை செய்ய ஆரம்பித்தார்.


அவர் இயற்றிய "சாயி வாணி" என்ற பாடல் உலகம் முழுவதும் உள்ள பக்தர்களால் பாடப்படுகிறது. நாம சப்தாகம் எனப்படும் தொடர்ந்து ஏழுநாட்கள் பாபாவின் ஓம் சாயி ஸ்ரீ சாயி ஜய ஜய சாயி என்ற வரிகளை திரும்பத் திரும்ப பாடும் முறையை ஏற்படுத்தினார். 1996 ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 6 ம் தேதி இயற்கை எய்தினார்.

சாயிமகராஜ் குருவைதேடி
இணையத்தில் படிக்க...
www.saidhyanalaya.org

சாய் தியானா
வாட்ஸ் அப் நம்பர்
99418 16692

பார் ஆண்ட வேந்தன்

பத்ரகிரியார்



பத்திரகிரியாரால் துறக்கப்பட்ட சுணங்கன் (நாய்) மறுபிறவியில் காசிராஜன் மகளாகத் தோன்றித் தந்தையுடன் வந்து பட்டினத்தாரையும் பத்திரகிரியாரையும் வணங்குதல்.

பத்திரகிரியார் அரச குலத்தில் தோன்றினவர். சிவபக்தியில் சிறந்தவர். அறநெறி வழுவாது உஞ்சேனை மாகாளம் என்னும் நாட்டை ஆண்டவர். அவரது அரசாட்சி காலத்தில் ஒருநாள் திருடர்கள் ஒன்று கூடி நகர்ப்புறத்திலே உள்ள ஒரு காட்டிலே கோயில் கொண்டருளும் விநாயகக் கடவுளிடம் "பெருமானே! நாங்கள் இன்றிரவு அரசமாளிகையில் களவாடப் போகிறோம். யார் கையிலும் அகப்படாது நிறைய செல்வத்தை களவாட வேண்டும் என்று வேண்டிக் கொண்டனர்.

அதன்பிறகு நள்ளிரவில் அரண்மனைக்குள் புகுந்து, பொன் ஆபரணங்களையும், மாணிக்கப் பதக்கங்களையும், பிறபொருள்களையும் திருடிக்கொண்டு, திரும்பிச் செல்லும்போது தமக்கு திருவருள் புரிந்த கணபதி ஆலயத்தை அடைந்து ஒரு மாணிக்க மாலையை கணபதியை

நோக்கி எறிந்துவிட்டுப் போய் விட்டனர்.

அப்போது இரவு நேரமாகையால் அம்மாணிக்கமாலை விநாயகர் திருக்கழுத்தில் விழாமல் அங்கு நிஷ்டையில் இருந்த பட்டினத்தாரின் திருக்கழுத்தில் விழுந்தது. பொழுது விடிந்ததும் அரசமாளிகையில் களவு நிகழ்ந்த செய்தி ஊரெங்கும் பரவிற்று. மன்னனின் ஆணைப்படி உளவுக்காரர்கள் திருடர்களைத் தேடத் தொடங்கினார்கள்.

காட்டுக்குள் இருக்கும் விநாயகர் ஆலயத்தின் வழியாக சென்ற உளவுக்காரர்களில் சிலர் விநாயகர் ஆலயத்தினுள் நிஷ்டையில் இருக்கும் பட்டினத்தாரின் கழுத்தில் மன்னனின் மாணிக்கமாலை கிடப்பதைக் கண்டு அவரைப் பிடித்துச் சென்று மன்னனின் முன்னிலையில் நிறுத்தினார்கள்.

பத்திரகிரி மன்னர் தீர விசாரிக் காமல் பட்டினத்தாரைக் கழுவேற்றிக் கொள்ளுமாறு கட்டளையிட்டார். காவலர்கள், சுவாமிகளைக் கழுமரத் தருகே அழைத்துச் சென்றார்கள். பெருமான் கழுமரத்தைத் கனிவாக பார்த்து "என்செயலாவ தொன்று மில்லை" என்னுந் திருப்பாசுரத்தைத் திருவாய் மலர்ந்து பாடினார்கள். உடனே கழுமரம் தீப்பிடித்து எரிந்து சாம்பலாயிற்று.

இச்செய்தியைக் கேள்வியுற்ற மன்னர் பெருமான் விரைந்து ஓடிவந்து சுவாமிகளின் திருவடிக்கமலங்களில் அடியற்ற பனைபோல் விழுந்து தன்குற்றத்தை மன்னித்தருளுமாறு வேண்டினார். பட்டினத்தடிகள் தனது ஞானதிருஷ்டியால் பத்திரகிரியாரது உண்மை நிலையைய உணர்ந்து "நாய்க்கொரு சூலும்" என்னுந் திருச் செய்யுளையருளிச் செய்து ஞானதீட்சை செய்தருளினார்.

பத்திரகிரியாரும் உள்ளத் துற வடைந்து ஞானாசிரியராகிய பட்டினத் தாரின் ஆணை எண்ணவோ அதன்படி நடக்க சித்தம் கொண்டார். பட்டினத்துச் சுவாமிகள் பத்திரகிரியாரை நோக்கி "திருவிடை மருதூருக்குச் செல்க" என்று கட்டளையிட்டு விட்டு தாம் தேசாந்திர யாத்திரை செய்யச் சென்று விட்டார்.

பத்திரகிரியார் குருவின் ஆணைப் படி திருவிடைமருதூரை அடைந்து சிவயோகத்தில் அமர்ந்திருந்தார். பட்டினத்தார் பல தலங்களைத் தரி சித்துப் பலவகைப் பாக்களைப் பாடி திருவிடைமருதூர் வந்து சேர்ந்தார். பத்திரகிரியார் வீடுதோறும் சென்று பிச்சை எடுத்துக் கொண்டு வந்து குருவிற்கு சமர்ப்பித்து அவர் உண்ட மீதியை தான் உண்டு வாழ்ந்து வந்தார்.

குரு உண்ட மிச்சத்தை தான் சாப்பிட்டுக் கொண்டிருக்கும் போது ஒரு நாள், ஒரு பெண்நாய் பசியால் மெலிவுற்று வாலை ஆட்டிக் கொண்டு பத்ரகிரியாரிடம் வந்தது. அதனைக் கண்டதும் பத்திரகிரியார் அதன் மேல் இரக்கமுற்று அதற்குச் சிறிது உணவிட்டார். அன்று தொட்டு அந்நாய் அவரை விட்டுப் பிரியாமல் அவருடனே தங்கிவிட்டது.

அந்நாய் முற்பிறப்பிலே அங்கத நாட்டில் விலைமாது வடிவந்தாங்கி யிருந்தது. அவ்விலைமாது இளையர், முதியர் என்னும் வேற்றுமையின்றிக் கூடிக் கலந்து பொருளீட்டி மது உண்டு தீய செயல்களில் தலைசிறந்து வாழ்ந்து வந்தாள். ஒருநாள் துறவி ஒருவர் தனது குருவின் ஆணையின்படி பிச்சை எடுப்பதற்காக அத்தாசியின்


இல்லம் வந்தார்.

அவளோ தான் உண்டு மிச்சமான உணவை அத்துறவிக்கு அன்பின்றி விளையாட்டாகத் தந்தாள். துறவியும் அதை பயபக்தியுடன் பெற்றுச் சென்றார். அவ்விலைமாது தான்புரிந்த பாவச்செயல்களின் காரணமாகப் பெண் நாயாகப் பிறந்தாள். அவள் துறவிக்கு உணவு கொடுத்ததன் பயனாகப் பத்திரகிரியாரை அண்டி அவர் அளிக்கும் உணவை உண்ணும் பேற்றைப் பெற்றாள்.

பத்திரகிரியாரும் அந்நாயைப் பாதுகாத்து வந்தார். ஒருநாள் திருவிடைமருதூர் உறையும் இறைவனான மருதவாணர் பத்ரகிரியாரை சோதிக்க எண்ணி ஓர் ஏழை பிச்சைக்காரன் வடிவந்தாங்கிப் பட்டினத்தடிகளிடம் சென்று "ஐயா! பசியால் வருந்துகிறேன். சிறிது அன்னமிடுங்கள்" என்று கேட்டார்.

அதற்குச் சுவாமிகள் "மேலைக் கோபுர வாயிலில் ஒரு குடும்பஸ்தன் இருக்கின்றான் அங்குச் செல்க" என்றார். அவர் கூறியபடியே ஏழை பிச்சைக்காரர் மேலைக் கோபுரத்திற்கு வந்து அங்கிருந்த, பத்ரகிரியாரைக் கண்டு "ஐயா! கீழைக் கோபுர வாயிலில் ஒருவர் இருக்கின்றார். அவரை என் பசிக்கு அன்னமிடுமாறு கேட்டேன். அவர் 'மேலைக் கோபுர வாயிலில் ஒரு குடும்பஸ்தன் இருக்கின்றான் அங்கே செல்க' என்று கூறினார். அவர் சொற்படி நான் இங்கு வந்தேன். என் பசிக்கு உணவிடுங்கள் என்றார்.

அது கேட்ட பத்திரகிரியார் "அய்யோ! பிச்சை எடுக்கும் இந்த திருவோடும், என்னுடன் இருந்து எனது எச்சிலைத் தின்னும் இந்த நாயும் என்னைக் குடும்பஸ்தனாக்கி விட்டதுவே" என்று கையிலிருந்த ஓட்டை நாயை நோக்கி விட்டெறிந்தார். அது நாயின் தலையில் பட்டு உடைந்தது, நாயும் மாண்டது. இறந்த நாய், ஞானியின் எச்சிலை உண்ட பாக்கியத்தால் காசி மகாராஜனுக்குப் பெண்ணாகப் பிறந்தது. அரசன் பேரன்போடு ஞானவல்லியென்று து





வந்தான்.

ஞானவல்லி நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து திருமணப்பருவம் அடைந்தாள். அரசன் ஞானவல்லியின் அறிவு குணங்களுக்கு ஏற்ப ஒரு நாயகனைத் தேட முயற்சி செய்தான். அதனை அறிந்த ஞானவல்லி ஒருநாள் தந்தையிடம் சென்று "ஐயனே! நான் யாருடைய வாழ்க்கைக்கும் உரியவளல்ல, திருவிடைமருதூர் மேலைக் கோபுர வாயிலில் தவம் புரிந்து வரும் பத்ரகிரியாருக்கே உரியவள் என்று கூறினாள்.

மன்னன் பெண்ணின் மன உறுதியைக் கண்டு தெளிந்து அவள் விரும்பியவாறே அவளைத் திருவிடைமருதூருக்கு அழைத்துச் சென்றான். அங்கே ஞான வல்லி பத்ரகிரியாரைக் கண்டு வணங்கி "அடிநாய் மீண்டும் தங்களின் திருவடி நாடி வந்தள்ளது" என்றாள். பத்திரகிரியார் அவளது பக்குவ நிலையை அறிந்து அவளது கையைப் பற்றிக் கொண்டு, கீழைக்கோபுர வாயிலில் வீற்றிருந்து அருளும் தமது ஞான குரு பட்டினத்தடிகளின் முன் நிறுத்தி "சுவாமி! தேவரீர் எச்சிலுண்ட நாயினுக்கு இவ்விழ பிறவி யெய்தலாமோ" என்று விண்ணப்பித்தார்.

பட்டினத்தடிகள் "எல்லாஞ் சிவன் செயல்" என்று திருவருளைத் தியானஞ் செய்ய, அங்கே பெருஞ் சோதி ஒன்று தோன்றிற்று. அந்த ஜோதியினுள் பத்திரகிரியார் அப் பெண்ணுடன் சென்று கலந்து மறைந்தார். அந்த முக்தி தந்த இடம் இன்றும் உள்ளது. கிழக்கு மட வீதியில் நாயடியார் கோயில் என்று இன்று அழைக்கப்படும் அந்த இடத்தை இத்தலத்துக்கு வந்தால் இன்றும் காணலாம்.

சித்தர்கள் அனைவருமே எளிமை யான பின்புலங்களில் இருந்தே வந்திருக்கின்றனர். சமூகத்தின் எளிய ஒடுக்கப் பட்ட தரப்பினரின் பிரதி நிதிகளாகவே சித்தர்களை தமிழ் சமூகம் ஆவணப் படுத்தியிருக்கிறது. எதிலும் விதி விலக்கு உண்டே! இந்த கருத்தியலுக்கு விதிவிலக்கானவர்கள் இரண்டு பேர் ஒருவர் வணிகக் குடும்பத்தில் பிறந்து பெரும்



செல்வம் ஈட்டி அதில் திளைத்த பட்டினத்தார். இரண்டாமவர், அரசராக இருந்து பட்டினத்தாரை தனது குருவாகக் கொண்டு அரச சுகபோகங்களைத் துறந்து தவ வாழ்க்கையை மேற்கொண்டவர்.

மெய்ஞானப் புலம்பல் துறவியாக பத்திரகிரியார் பாடிய பாடல்கள் “மெய்ஞானப் புலம்பல்” என்று அழைக்கப்படுகின்றன. மிக எளிய வார்த்தைகளையும் ஆழமான அர்த்தங்களையும் கொண்டிருக்கும் பாடல்கள் அவை.

ஆங்காரம் உள்ளடக்கிய ஐம்புலனைச் சுட்டறுத்துத் தூங்காமல் தூங்கிச் சுகம் பெறுவதெக்காலம்?

வேடிக்கையும் சொகுசும் மெய்ப்பகட்டும் பொய்ப்பகட்டும் வாடிக்கை எல்லாம் மறந்திருப்பதெக்காலம்?

நான் அவனாய்க் காண்பதெல்லாம் ஞான விழியால் அறிந்து தான் அவனாய் நின்று சரணடைவதெக்காலம்?

நான்நின்ற பாசமதில் நான் இருந்து மாளாமல் நீநின்ற கோலமதில் நிரவிநிற்ப தெக்காலம்?

உதயச் சுடர் மூன்றும் உள்வீட்டிலே கொளுத்தி இதயத் திருநடனம் இனிக் காண்பதெக்காலம்?

பற்றற்று நீரில் படர்தாமரை இலைபோல் சுற்றத்தை நீக்கி மனம் தூரநிற்பதெக்காலம்?

"வேதாந்தவேதம் எல்லாம் விட்டொழிந்தே நிட்டையிலே ஏகாந்தமாக இருப்பதினி எக்காலம்?"

"நவசூத்திர வீட்டை நான்என்று அலையாமல் சிவசூத்திரத்தைத் தெரிந்தறிவது எக்காலம்?"

"புல்லாய் விலங்காய் புழுவாய் நரவடிவாய் எல்லாப் பிறப்பின் இருள் அகல்வது எக்காலம்?"

பத்திரகிரியார் பாடல்கள் பெரும்பாலும் "எக்காலம்?" என்ற கேள்வியுடன் முடிவதாக அமைகின்றன. தஞ்சை மாவட்டம் திருவிடைமருதூரில் முக்தி அடைந்ததாக கருதப்படும் பத்திரகிரியார் எழுதிய மெய்ஞான புலம்பல் என்கிற நூல் சித்தர் நூல்களில் தனித்துவம் வாய்ந்தது.

அருட் புலம்பல் என அறியப்படும் இந்த பாடல்கள் எளிய தமிழில்,முதல் வாசிப்பிலேயே மிகஎளிதாய் பொருள் உணரும் வகையில் எழுதப் பட்டிருப்பது சிறப்பு. எனினும் மீள் வாசிப்புகளில் மட்டுமே இந்த எளிய சொல்லாடல்களின் பின்னிருக்கும் விரிவான தத்துவத்தின் அருமைகளை உணர்ந்திட இயலும்.

கண்களுக்கு புலப்படவில்லை என்பதற்காக காற்று இல்லை என்

றாகி விடுமா? உணர்கிறோம், சுவாசிக்கிறோம். அதனால் உயிர் வாழ்கிறோம். இதைப் போலவே எள்ளினுள் எண்ணை மறைந் திருப்பதைப் போல, கரும்பினில் சுவை உறைந்திருப்பதைப் போல,

மலரில் மணம் நிறைந்திருப்பதைப் போல நம்மில் ஆன்மசக்தியாய் இறைவன் மிளிர்ந்திருக்கிறான்.

எள் என்பது புறப்பொருள் எண்ணெய் என்பது அகப்பொருள் கண்ணுக்கு தெரியும் எள்ளில் நிறைந்திருக்கும் எண்ணை கண் ணுக்கு தெரிவதில்லை. இப்படியே கரும்பிலும், மலரிலும் ஏன் மனிதனிலும் அகப் பொருளாய் மறைந் திருப்பதை புரிந்து கொள்ள வேண்டும். அகப்பொருள் என்ற ஒன்றுக்காகத்தான் புறப்பொருள் அமைகிறது. நாம் எள்ளில் இருந்து எண்ணெய் எடுக்கும் போதும், பூவின் வாசத்தை நுகரும் போதும், அரும்பை உண்ணும் போதும் அதில் உள்ளவற்றை உணரமுடிகிறது. அவற்றை ஒப்புக்கொள்ளவும் முடியும்.

ஒரு முறை உணர்ந்த பின் கரும்பு இனிப்பு சுவை உள்ளது என்றும், மலர் வாசம் வீசும் என்றும் யாரும் சொன்னால் மறுப்பதில்லை.

ஆனால் மனித உடலில் ஆன்மாவாய் இறைவன் உறைந்துள் ளான் என்றால் நம்பத்தான் யாரு மில்லை.இந்த உண்மையை உணர்ந்து நாங்கள் கடவுளை அறிவது எப்போது என்று கேட்கிறார் பத்திரகிரியார்.

எள்ளும் கரும்பும் ஏழு மலரும் காயமும் போல்உள்ளும் புறமும் நின்றது உற்றறிவதெக்காலம்? என்கிறார்.

பத்திரகிரியார் ஜீவ காருண்யத்தை ஒரு தலை சிறந்த கோட்பாடாகவே உபதேசிக்கின்றார். உயிர்களைக் கொன்று அவற்றின் மாமிசங்களைப் புசிப்பதை கண்டிக்கிறார். உலகிலுள்ள அனைத்து உயிர்களையும் தன்னுயிராக நினைத்து நேசிப்பது ஒரு தவம் என்று சொல்கிறார். மன்னுயிரைக் கொன்று வதைத்துண்டு உழலாமல் தன்னு யிர்போல் எண்ணித் தவம் முடிப்பது எக்காலம்? என்கிறார்.

சமயக் கோட்பாடுகளுக்கும், சமூக ஒப்பனைகளுக்கும் நூலறிவுக்கும் அப்பாற்பட்டு உண்மையை அறிவதற்கு வாழ்க்கையை ஒரு வாய்ப்பாகப் பயன்படுத்திக் கொண்டவர்களே சித்தர்கள். இவர்கள் தம் உணமையறிவதற்கான தேடலானது புறத் தேவைகளுக்கான தேடலாக அமையாது தம்மை அறிவதற்கான ஆன்மத் தேடலாக அமைந்தது.

இவ்வான்மத் தேடலையும் வாழ்க்கையிலிருந்து தப்பிக்கும் வழியாகக் கருதாது தடுமாறாமல் பயணம் செய்யப் பயன்படும் திசைகாட்டியாகவே கருதினர்.

அவ்வழி உண்மையறிதற்குரிய வாயிலாக உடம்பைக் கருதினர் அதனால் நிலையற்றதாக துன்பம் தருவதாக அருவருக்கத்தக்கதாக, இழிந்துரைக்கப்பட்ட உடம்பினை அழியாத வாய்மை உடம்பாக்கும் முயற்சியில் ஈடுபட்டனர்.

அவ்வாறு உடலை ஓம்பி உண்மையறிதற்குரிய நெறியாகச் சித்தர்கள் முன்வைத்தது யோக நெறியாகும் இந்த யோக நெறியைக் கோட்பாட்டளவில் விளக்குவதே சித்தர் மெய்யறிவியல். அதன்படி சிறிதும் விழகாது தம் வாழ்வை அமைத்துக்கொண்ட, பத்ரகிரியாரை வணங்கி வளம் பெறுவோம்.

வள்ளல் பெருமான் எப்படி இருப்பார்?

19ம் நூற்றாண்டில் வள்ளலாருடன் வாழ்ந்தவர்களின் நிழற்படங்களை இன்று நாம் பார்க்க முடிகிறது.

அப்படியிருக்கையில், வள்ளலாரின் ஒரே ஒரு நிழற்படம் கூட ஏன் இல்லாமல் போனது? வள்ளல் பெருமானாரை புகைப்படம் எடுக்கப் பட்டதா? இல்லையா?

இப்போது சிலைகளிலும், சித்திரங் களிலும் இருப்பதை போன்றுதான் வள்ளலார் இருந்தாரா?

இளவயது முதலாக தவ வலிமை யின் காரணமாக வள்ளலார் பிரணவதேகம் என்கிற ஒளிஉடலை பெற்றிருந்தார். அவர் நடந்தால் நிலத்தில் காலடித்தடம் பதியாது. அவரின் நிழலும் நிலத்தில் விழாது. கள்ளிலும், முள்ளிலும் நடந்து செல்வார். அவருக்கு எதுவும் ஆகாது.

அப்படிப்பட்ட ஒளி உடல் எப்படி ஒளிப்படத்தில் (நிழற்படம்) பதிவாகும்.

அதனால்தான் வள்ளலாரைப் பற்றிய நிழற்படங்கள் எதுவும் இல்லை என்று சொல்கிறார்கள்.

வடலூர், கருங்குழி, மேட்டுக்குப்பம் ஆகிய ஊர்களில் வள்ளலாருடன் தங்கியிருந்தபோது நெருங்கிப்பழகிய காரணப்பட்டு ச.மு.கந்தசாமிப்பிள்ளை எழுதியுள்ள, ''இராமலிங்க சுவாமிகள் சரித்திர சுருக்கம்''என்னும் நூலிலும் இவ்வாறே இருக்கிறது.



ஒளிஉடல் பெற்ற துறவியின் உருவம் பதிவாகவில்லை என்றால், வள்ளலாரை நிழற்படம் எடுக்கும் முயற்சிகள் நடந்துள்ளதா? இதுவும் ச.மு.கந்தசாமிப்பிள்ளையின் குறிப்புகள் மூலம் நமக்கு தெரியவருகிறது. வள்ளலாரை நிழற்படம் எடுத்துவிட வேண்டும் என்று பலரும் முயன்றார்கள். ஆனால், ஒருமுறை கூட அவரின் உருவம் நிழற்படத்தில் பதிவாகவில்லை.

இது தொழில்நுட்ப பிரச்சனையாக

கருங்குழியில் இருந்த ஓவியம்



இருக்குமோ என்று கருதி, சென்னையில் இருந்து பிரபல நிழற்படக்கலைஞர் மாசிலாமணி முதலியார் என்பவரை வரவழைத்து படம் எடுக்கச்சொன்னார்கள்.

அவர், வள்ளல் பெருமானாரை எட்டுமுறை படம் பிடித்தும் ஒன்றில் கூட அவரின் உருவம் பதிவாகவில்லை. ஒன்பதாவது முறையாக முயன்று பார்த்தபோது, வள்ளலாரின் உடை மட்டும் மங்கலாக பதிவாகியிருந்தது. கொஞ்சம்கூட அவரின் உருவம் பதிவாகவில்லை.இது தொழில்நுட்ப பிரச்சனை இல்லை. ஒளிஉடல் என்பதால் நிழற்படத்தில் பதிவாகவில்லை என்று அன்பர்கள் நினைத்தார்கள்.

வள்ளலாரின் உருவம் இயற்கையாகவே பதிவாகவில்லையா, இல்லை, தனக்கு இருந்த சக்தியினால் நிழற்படத்தில் தன் நிழல் விழாமல் அவர் பார்த்துக்கொண்டாரா? உருவ வழிபாட்டை முற்றிலும் வெறுத்தவர் வள்ளலார். உருவ வழிபாடு கூடாது, அருட்பெருஞ்ஜோதியே கடவுள் என்று வலியுருத்தி வந்த வள்ளலாருக்கு, எங்கே தனது உருவத்தையும் வைத்து வழிபட்டுவிடுவார்களோ என்ற தயக்கம் வந்திருக்கலாம்.


அந்த தயக்கத்தினால்தான் தன் உருவம் நிழற்படத்தில் பதிவாகாமால் பார்த்துக்கொண்டார். ஆனாலும், இதை உணராத அன்பர்கள் தங்களின் முயற்சியை தொடர்ந்தார்கள். படம்தானே எடுக்கமுடியவில்லை. அவரை சிலையாக வடித்துவிடலாம் என்று முடிவெடுத்தார்கள்.

பண்ருட்டியில் இருந்து ஒரு குயவரை அழைத்து வந்து, வள்ளலாரை காட்டி, இதே போல் சிலை ஒன்றை உருவாக்க வேண்டும் என்று கேட்டனர். அவரும் மண்ணால் ஆன வள்ளலாரின் சிலையை வடித்து, அதற்கு வண்ணமடித்து கொண்டு சென்றார்.

இதைக்கண்டு திடுக்குற்ற வள்ளலார், இதற்கு ஒரு முடிவு கட்டியாக வேண்டும் என நினைத்தார். குயவர் அந்த சிலையை கொடுத்தபோது, வள்ளலார் அதை வாங்கி பார்த்தவர்,

''பொன்னான மேனி மண்ணாயிற்றே' என்றுகூறி புன்னகைத்துக்கொண்டே, கைகளில் இருந்து நழுவவிட்டார். சிலை கீழே விழுந்து உடைந்து போனது. கீழே விழுந்து உடைந்ததும் குயவர் வருந்தினார். தவறி விழுந்து உடைந்ததாக எல்லோரும் பதறினார்கள். வள்ளலாரோ அகமகிழ்ந்தார்.

அப்படியும் அன்பர்கள் விட்டபாடில்லை. அடுத்த முயற்சிக்கு ஆயத்தமானார்கள் ஓவியர்களைக் கொண்டு வள்ளலாரின் உருவத்தை வரைந்துவிடலாம் என்ற முடிவிற்கு வந்தார்கள். அப்படி சில ஓவியர்கள், வள்ளலாரை நேரில் கண்டு வரைந்த ஓவியங்கள்தான் இன்று வள்ளலாரின் உருவமாக இருக்கிறது. இந்த சித்திரங்களை வைத்துதான் பின்னாளில் வள்ளலாரின் சிலைகள் வடிக்கப்பட்டன.



வள்ளலாரின் சித்திரங்கள் மூன்று விதமாக இருக்கின்றன. இதில், எது உண்மையான வள்ளலாரின் உருவம் என்ற சந்தேகம் எழாமல் இல்லை. அமர்ந்த நிலையில் நீண்ட மீசையுடன் இருந்த ஓவியம் கருங்குழி வேங்கட ரெட்டியால் வீட்டில் இருக்கிறது.

நின்ற நிலையில் மெல்லிய மீசையுடன் இருக்கும் ஓவியம், ஆடூர் சபாபதி குருக்கள் வீட்டு பூஜை அறையில் இருக்கிறது. மெல்லிய மீசையுடன், இலேசான தாடியுடன், சோகமாக இருக்கும் ஓவியம் வேட்டவலம் ஜமீன் மாளிகையில் இருக்கிறது.

வள்ளலாரின் சமரச சன்மார்க்க ஆய்வில் ஈடுபட்டு அது குறித்த பல் வேறு நூல்களை எழுதியிருக்கும் பா.கமலக்கண்ணனோ, வேட்டவலம் ஜமின் மாளிகையில் இருக்கும் படமே வள்ளலாரின் உண்மை உருவமாக இருக்கும் என்று கூறுகின்றார்.

வள்ளலாரோடு 1849 முதல் 1874 வரையிலும் 25 ஆண்டுகள் உடனிருந்த தொழுவூர் வேலாயுத முதலியார் அடிகளாரின் மறைவுக்கு பின்னர், 1882ல் சென்னை பிரம்ம ஞான சபாவின் துணைத்தலைவர் ஜி.முத்துராம் செட்டியார் முன்பாக,

கும்பகோணம் ஆராவமுது ஐயங்கார், மஞ்சக்குப்பம் சிங்காரவேலு முதலியார் ஆகியோரை சாட்சியாக வைத்துக்கொண்டு, அளித்துள்ள வாக்குமூலத்தில் வள்ளலார் எப்படி இருப்பார் என்பதை கூறியுள்ளார்.

வள்ளல் பெருமானார் நடுத்தரமான உயரத்துடன் இருப்பார். மெலிந்து,

எலும்புகள் தெரியும்படி இருந்தாலும் உறுதியான உடல். எந்நேரமும் சுறுசுறுப்புடன் இருப்பார். ஓய்வு என்பதே அவர் அகராதியில் கிடையாது. பரந்த, கூரிய, ஒளிவீசும் கண்கள், மாநிற மேனி, நீளமான மூக்கு.

இறுதிக்காலங்களில் தலைமுடியை நீளமாக வளரவிட்டிருந்தார். அமைதியான அந்த முகத்தில் ஒரு மெல்லிய சோகம் எப்போதும் இழையோடிக்கொண்டிருக்கும் என்று வேலாயுத முதலியாரின் வாக்கு மூலத்தின் மூலம் அறிய முடிகிறது. இதை வைத்துப்பார்த்தால், மூன்று ஓவியமுமே ஒத்துப் போகிறது.

வள்ளலாரின் உண்மை உருவம் இதுதான் என்று கூறுவதற்கு வழி இல்லை என்றாலும், உருவ வழிபாடு கூடாது என்று சொன்னவரின் உருவம் எப்படியிருக்கும் என்று அலசுவது அவசியமில்லைதான். இருப்பினும் அவரை நேரில் பார்த்து வரைந்த புகைப்படங்களை நாம் பார்க்கக் கிடைத்தது நமது பாக்கியமே!

அருட்பெரும் ஜோதி!
அருட்பெரும் ஜோதி!
தனிப்பெரும் கருணை!



ஹேமாத்பந்த்

கோவிந்த ரகுநாத் தபோல்கர் என்ற இயற் பெயர் கொண்ட இவரை பாபா ஹேமாத்பந்த் என்ற பட்டப்பெயர் சூட்டி அழைத்தார். இன்று சாயி பக்தர்கள் அனைவராலும் பாராயணம் செய்யப்படும் ஸ்ரீ சாயி சத் சரிதம் என்ற நூலை இயற்றியவர்.

காகா சாகேப் தீட்சித்தால் பாபாவிடம் அறிமுகம் செய்து வைக்கப்பட்டார். ஐந்தாம் வகுப்பு வரை மட்டுமே படித்த அவர் தன் சொந்த முயற்சியால் மாஜிஸ்திரேட் என்ற பதவி வகித்தவர். அவருடைய அடிப்படை குணங்களான அகந்தை, வாதிடுவது, உயர் வாழ்கை எதிர்பார்ப்புகள் போன்றவற்றில் 1917 ல் ஒரு மாற்றம் ஏற்பட்டது.

அவர் தான் எழுதிய ஸ்ரீ சாயி சத் சரிதா 18 மற்றும் 19 ம் அத்தியாயங்களில் அவை பற்றி விவரமாகக் எழுதி இருக்கிறார். 1918 ம் ஆண்டு பாபாவின் மறைவுக்குப் பின் சீரடி சாயி சன்ஸ்தானின் நிர்வாகத்தில் பெரும் பங்கு வகித்தார்.

சித்தர்களின் ஜீவ சமாதி தரிசனம்



- அயனாவரம்
வெங்கடேசன்
9941782523

சித்தர்களின் சீவ சமாதி தரிசனத்தில் இம்மாதம் ஸ்ரீ மத் சமரபுரி குருசாமி சித்தரின் சீவ பீடத்தை தரிசனம் செய்து அவரது வரலாற்றினை அறிந்து கொள்வோம் வாருங்கள்.

ஸ்ரீ மத் சமரபுரி குருசாமி



சென்னை துரைப்பாக்கம் அருகில் உள்ள மதுரா மேட்டுக்குப்பம் என்ற ஆன்மீக பூமியில், 175 ஆண்டுகளுக்கு முன்பு சித்தர் அவதரித்தார். இளம் வயதிலேயே ஆன்மீக ஆட்டம் காரணமாக பல சிவத் தலங்களுக்கு சென்று வந்தார். திருமண வயது வந்ததும் கூடுவாஞ்சேரியை சேர்ந்த பொண்ணம்மாள் என்ற மங்கையை மணந்தார்.

சுவாமிகளுக்கு,கண்ணம்மா என்ற பெண் குழந்தையும், இராமலிங்கம், சுப்பிரமணி,கிருஷ்ணமூர்த்தி, வாசுதேவன், வரதராஜன், என்ற 5 மகன்களும் பிறந்தனர். இதில் கண்ணம்மா என்ற பெண் மட்டும் 10 வயதிலேயே சிவ பதம் அடைந்தார். இவர்கள் அனைவருக்கும் சுவாமிகள் கல்வி ஞானத்தோடு, இசை ஞானத்தையும் கற்றுக் கொடுத்தார்.

நம் சுவாமிகள் இசைக்கருவிகளை இசைப்பதில் வல்லவர்.

சுவாமிகள் மேட்டுக்குப்பம் பகுதிகளில் தவம் இருக்கும்போது. அங்கே மரத்தினுள் சிவலிங்கம் இருப்பதைக் கண்டு அதை வெளிக்கொண்டு வந்து அந்த லிங்கத்தை வைத்து ஆலயம் எழுப்பி அதற்கு ஆழிகண்டேஸ்வரர் திருக்கோவில் என்று பெயரிட்டார்.

மேலும் தான் வாழ்ந்த மேட்டுக்குப்பத்தில்

கிருஷ்ணன் கோவில் ஒன்றையும் கட்டினார்.

மேட்டுக்குப்பம் பகுதியில் 100 வருடங்களுக்கு மேல் வாழ்ந்தவர். இவர் சமாதி நிலையை அடைந்து 70 வருடங்கள் ஆகிறது.

தன்னை நாடிவரும் பக்தர்களது நேய்களை விபூதி மூலம் தீர்த்து வைப்பார். நோய் தீர்ந்த பக்தர்கள் கொடுக்கும் காணிக்கைகளை அடுத்தவர்களுக்கு கொடுத்துவிடுவார். எதையும் தானே வைத்துக் கொள்ள மாட்டார்.

ஒரு சமயம் மேட்டுக்குப்பத்தில் அரியாத்தம்மன் கோவிலில் திருவிழா கொண்டாடப்பட்டது. அப்போது தேர் புறப்படத் தயாராக இருந்தது. அந்த சமயத்தில் சித்தரின் பத்து வயது மகளான கண்ணம்மாள் திடீரென்று நோய்வாய்ப்பட்டு இறந்து விடுகிறாள். தேர்திருவிழாவை நிறுத்திவிடலாம் என்று ஊர் பெரியவர்கள் முடிவு செய்து சித்தரிடம் கேட்க, சித்தரோ, வேண்டாம் சற்று பொறுங்கள் என்று கூறிவிட்டு, சிவனை நினைத்து தவம் செய்துவிட்டு, இறந்த தன் மகளை நோக்கி, கண்ணம்மா, எழுந்திரு



ஸ்ரீ ஞான மாணிக்கசிவாச்சாரியார் சித்தர் ஜீவபீடம்



என்று கூற, சித்தரின் மகள் உயிர்பெற்று எழுந்து உட்கார்ந்தாள்.

ஊர் மக்கள் சமரபுரி சித்தரின் மகிமையை எண்ணி வியந்து போய் வணங்கினர். பின்னர் சித்தரின் அனுமதியுடன் தேர் வடம் பிடிக்கப்பட்டு ஊரை வலம் வந்தது. தேர் கோவிலுக்குச் சென்று நிலை பெற்றவுடன், சித்தர் தன் மகளை, கண்ணம்மா, படுத் துக்கொள் எனக் கூற அடுத்த நொடி கண்ணம்மாள் படுத்துக்கொள்ள அவளின் உயிர் பிரிந்தது.

சித்தர் அவர்கள் ஒரு சங்கீத வித்வான். இசைப்பாடல்களை எழுதுவதில் வல்லவர். இவர் எழுதிய "வாசுதேவ மாலை" என்ற புத்தகம் மிகச்சிறப்பு வாய்ந்த இசை நூலாகும்.

சித்தர் அவர்கள் தன்னுடைய சமாதிக்குப் பின்னரும் பல அற்புதங்களை



நிகழ்த்தியுள்ளார். ஒரு சமயம் ஐ.டி கம்பெனியில் பணிபுரியும் அன்பர் ஒருவர் பணி முடிந்ததும் நள்ளிரவில் சித்தரின் சமாதி கோவில் வழியாக வீடு திரும்புவார்.

அப்போது அவருக்கு ஓர் பிரகாசமான ஒளி பிழம்பு காட்சி கிடைத்திருக்கின்றது. அவரும் அந்த ஒளியை நொருங்கிச் செல்ல அந்த ஒளி சித்தரின் சமாதியில் சென்று மறைந்திருக்கிறது. அன்றில் இருந்து அந்த நண்பர் சித்தரையே தன் குருவாக ஏற்றுக்கொண்டு வணங்கி வருகிறார்.

மேட்டுக்குப்பம் பகுதியைச் சேர்ந்த பெண்மணி ஒருவர் சீவசமாதியில் சித்தரை வணங்கிக்கொண்டிருந்த போது, வெளியே போ, வெளியே போ என்ற குரல் கேட்டிருக்கிறது. அந்தப் பெண்ணும் உடனடியாக வெளியே செல்ல, அடுத்த நிமிடம் சீவ சமாதியின் மேற்கூரை இடிந்து விழுந்திருக்கிறது. தக்க சமயத்தில் தன் பக்தரை ஆபத்தில் இருந்து காப்பாற்றி அருளினார் சித்தர் சமரபுரி சுவாமிகள்.

சிவ வழிபாட்டில் சிறந்து விளங்கிய நமது சித்தர் கார்த்திகை தீபம் நன்னாளில் சீவ சமாதி அடைந்தார். தான் சமாதி ஆகும் நாள் நேரத்தை முன் கூட்டியே அறிவித்து அதன்படியே சீவ சமாதி ஆகியிருக்கிறார்.

சித்தரின் பழைய சமாதி கோவில் தற்போது புரணமைக்கப்பட்டு சிறப்பாக கட்டப்பட்டுள்ளது. தற்போது சாலைகள் உயர்த்தப்பட்டுள்ளதால் பழைய சமாதிக் கோவில் பாதாளத்தில் இருப்பதுபோல் இயற்கையாகவே வெகு சிறப்பான அமைப் பாக அமைந்துள்ளது.

அற்புதமான அமைதியுடன் திகழும் சமரபுரி சித்தரின் சீவ ஆலயத்தை வணங்குங்கள். நீங்கள் எண்ணிய எண்ணங்கள் விரைவில் நிறைவேற்றும் சக்திவாய்ந்த சீவசமாதி என்பதை நீங்களே உணர்வீர்கள்.

சித்தர்களின் சீவ பீடத்தை தொழுவோம்! சீரான வாழ்வை சிக்கலின்றிப் பெறுவோம்!

சீவபீட முகவரி:

ஸ்ரீ மத் சமரபுரி குருசாமி சித்தர் சீவபீட ஆலயம்,மதுரா மேட்டுக்குப்பம், துரைப்பாக்கம், சென்னை 97.

பேரூந்து வழித்தடம்: அடையார் நாவலூர், சிறுசேரி **இறங்குமிடம்:** மேட்டுக்குப்பம்.

புகை வண்டி மார்க்கம்: சென்னை கடற்கரை அடையார் டைட்டல் பார்க்

இறங்குமிடம்: ஐ.டி பார்க்கில் இறங்கி அங்கிருந்து சேர் ஆட்டோ, பேரூந்து மூலம் மேட்டுக்குப்பம் செல்லலாம்.

– (தொடரும்)

சீரடி சாயி சன்ஸ்தானத்தை நிறுவியவர். ஏராளமானோர் சீரடி வரவும் அவர்களுக்கு பாபாவிடம் பக்தியும், மதிப்பும், அன்பும் ஏற்படக் காரணமானவர். சாயி பக்தியை பரவச் செய்ய கருவியாக செயல்பட்ட " சாயி லீலா" என்ற பத்திரிக்கையை தொடங்கியவர்.

மாதவ் ராவ் தேஷ் பாண்டேயால் 1909 ம் ஆண்டு பாபாவிற்கு அறிமுகம் செய்து வைக்கப்பட்டார். வெளியூர் மக்கள் சீரடியில் பாபாவை தரிசனம் செய்ய வந்தால் அவர்கள் தங்க வசதியாக தீட்சித் வாடா என்ற தங்குமிடத்தை கட்டித் தந்தவர்.

பாபாவே தபோல்கரிடம் " காகா சாகேப் ஒரு நல்ல மனிதர். அவர் சொல்வது போல் நட" என்று அறிவுறுத்தப்பட்டவர். பாபா தீட்சித்தின் குடும்பத்தினருடைய முழு பொறுப்பையும் ஏற்றுக் கொண்டு அவர் ஆன்மீக சாதனையில் முன்னேற உதவினார்.



ஹரி சீத்தாராம் தீட்சித்

எல்லாம் சாயி! எல்லாமே சாயி!!

"கூட்டுப்பிரார்த்தனை"

உங்களுக்காக! வழி நடத்துபவர் "பிரார்த்தனை செம்மல், பிரார்த்தனை சீலர், பிரார்த்தனை சிகரம்" த. சாய் கலியன் M.com.,BL., MBA., M.sc(yoga).,CAIIB., Spiritual Healing Master. வழக்கறிஞர் மற்றும் யோகா ஆசிரியர்.

கல்வி, தொழில்,நோய்,வறுமை, கடன்,திருமணத்தடை, குழந்தையின்மை, குடும்ப பிரச்சினை எதுவாக இருந்தாலும் அவற்றிற்கெல்லாம் பொது நலன் கருதி, சேவை மட்டுமே கருத்தில் கொண்டு நமது கண்கண்ட கலியுக தெய்வம் சற்குரு சாயிநாதனிடம் பிரார்த்தனை செய்யப்படும்.

தொடர்புக்கு : த. சாய் கலியன் 34/22A, சிபி தெரு, பிரின்ஸ் சர்க்கிள், மகேந்திரபுரி, சேலம். 636008. தொலைபேசி:9962193311, 9092242598.

காக்கும் கடவுள்

கடவுள் தீயவர்களை அழிக்க அவதரித்து வருகிறார். ஆனால், குருமார்களான ஞானியரோ தீயவர்களைத் திருத்தவே அவதரிக்கிறார்கள். அவர்களுக்கு நல்லவர் கெட்டவர் என்ற பேதம் ஏதும் கிடையாது. சாயிபாபா அப்படிப்பட்ட ஞானியாக தன்னை வெளிப்படுத்திக் கொண்ட கடவுள்.

பாபாவிடம் வருகிறவர்கள் யாராக இருந்தாலும், அவர்கள் அவரால் ஆசீர்வதிக்கப்படுகிறார்கள். கஷ்ட நிலையிலிருந்து நீங்கி, சுகத்தை அடைகிறார்கள். கெட்டவர்களாக இருந்தாலும் படிப்படியாக நல்ல மனிதர்களாக மாறுகிறார்கள்.

படித்தவர், படிக்காதவர், பக்தியுள்ளவர் பக்தி இல்லாதவர், நல்லவர், கெட்டவர், மேலோர்,கீழோர், உயர்ந்தோர், தாழ்ந்தோர், தீண்டத்தக்கவர், தீண்டத்தகாதவர், சிறியோர் பெரியோர், அரசன்,ஆண்டி,மனிதர், விலங்கு என எந்த வேறுபாடும் பார்க்காதவர் பகவான் சாயி பாபா.

நீங்கள் இப்போது எந்த நிலையிலிருந்தாலும் சற்றும் பயப்பட வேண்டாம். அவரை சரணடைந்து விட்டால் போதும், எந்த மனிதனையும் ஆசீர்வதிக்கிற கரங்களை உடையவராக நமது பாபா இருக்கிறார். ஒரே ஒரு விக்ஷயத்தை மட்டும் கவனிக்க வேண்டும். பாபாவை கும்பிட்டால் கஷ்டம் போய் விடும் என்ற கண்மூடித்தனமான நினைப்பு மட்டும் தவறானது. அதை மட்டும் கவனிக்க வேண்டும்.

கும்பிடுகிற எல்லோரும் நம்பிக்கையோடு கும்பிடுவது கிடையாது. நம்புகிற எவரும் முழு மனதுடன் நம்புவதும் கிடையாது. முழு மனதுடன் நம்புகிறேன் என்று கூறுபவர்கள் அவரையே முழுமையாக சரண் அடைவதும் கிடையாது.

சரண் அடைந்துவிட்டேன் என்பவர்கள், இது எப்போது நடக்கும்? எப்படி நடக்கும்? என்றெல்லாம் கேள்விகள் கேட்காமல் இருப்பதில்லை.



பணிய வேண்டும்! பணிவு வேண்டும்!

சாயி பக்தர்கள் என்று சொல்லிக் கொள்பவர்கள் முதலில் பணிய வேண்டும். பணிதல் என்றால், பணிவுடன் இருத்தல் என்றே பொருள் கொள்ளலாம். நாம் நல்ல வசதி படைத்தவராக இருக்கலாம், மக்களால் மதிக்கப்படுகிறவராகவோ, போற்றப்படுகிறவராகவோ இருக்கலாம். அனைத்தும் அறிந்த ஞானியாக இருக்கலாம். இந்த நாட்டை ஆளும்

அரசராகவும் இருக்கலாம்.

ஆயினும், தன் நிலையை எண்ணி கர்வப்படாமல், கடவுள் முன்னால் சர்வ சாதாரணமாக வீழ்ந்து பணிய வேண்டும். அவர் அனைத்து படைப் புயிர்களிலும் வியாபித்து இருக்கிறார் என்பதை உணர்ந்து, அனைவரிடமும் பணிவோடு இருக்க வேண்டும்.

சரணம் என்றால் பாதம் என்று பொருள். உங்கள் பாதமே கதி. என்று வீழ்ந்து விடுவதற்குத்தான் சரணா கதி என்று பொருள். இவ்வாறு வீழ்ந்து விட்ட பிறகு, எப்போது தூக்கி விடுவீர்கள்? என்ன செய்யப் போகிறீர்கள்? என்றெல்லாம் எந்த விதமான கேள்வியையும் கேட்கவே கூடாது.

நான் அவர் கையில் ஒரு கருவி. அவருக்கு நான் அடிமை.அவரது வேலைக்காரன். அவர் என்ன செய்ய நினைக்கிறாரோ அதைச் செய்யட்டும் என அவர் பொறுப்பில் ஒப்படைத்து விட்டுப் பேசாமல்,அவரது நாமாவை வாயாரப் பாடிக்கொண்டே இருக்க வேண்டும். இப்படிச் செய்தால் நீங்கள் எப்படிப்பட்டவராக இருந்தாலும் அவர் உங்களை ஆசீர்வதிப்பார்.

நாம் இன்றைக்கு நலமோடு இருப்பதற்கு முக்கியக் காரணம் பகவானின் பாதுகாப்பு இருப்பதால் தான் என்பதே உண்மை.

இயற்கையால், மனிதர்களால், விலங்குகளால், அமானுஷ்யங்களால், கிரகங்களால் எப்போதும் ஆபத்துகள் காத்திருக்கின்றன. இவை எந்த நிலையிலும் நம்க்கு தொல்லை தராமல் இருப்பதற்காக நாம் அவரது பாதுகாப்பை நாட வேண்டும்.

ஒரு மனிதனுக்கு பாதுகாப்பு என்பது இறைவனுடைய திருநாமம். அது எப்போதும் அவனது நாவில் இருக்குமானால், எந்த நிலையிலும் அவன் காப்பாற்றப்படுவான்.

பாபா என்ற பெயர் மட்டு மல்ல, வேறு எந்தப்பெயரை நித் தியப் பாராயணமாக மனதில் பதித்திருந் தாலும், அதை சொல்லிக் கொண்டே இருந்தாலும் அது கவசமாக நம்மை காப்பாற்றும்.

பாபா தபோல்கரைப் பற்றிக் கூறியதையும், தபோல்கர் பாபா வையும் அவரது வாக்கையும் எப் படி பரிபூரணமாக நம்பினார் என்ற கதையை தியானிக்கலாம். தபோல்கர் பாபாவை தரிசிக்க வந்தபோது, அவருடன் வந்திருந்த அண்ணா சிஞ்சணீகர் என்ற பக்தர், தபோல்கருக்கு உதவி செய்யுமாறு வேண்டிக்கொண்டார். அப்போது பாபா என்ன பதில் சொன்னார் என்று சிந்தியுங்கள்.

"அவருக்கு ஏதாவது உத்தியோ கம் கிடைக்கும். ஆனால் அவர் என் னுடைய சேவையில் இறங்க வேண்டும். இறங்கினால் சுகமான வாழ்க்கை நடத்துவார். அவருடைய உணவுத்தட்டு என்றும் நிறைந்திருக்கும். உயிருள்ள வரையில் காலி ஆகவே ஆகாது. என்னிடம் முழு விசுவாசத்துடன், இடைவிடாது என் பாதுகாப்பை நாடுவாரேயானால், அவருடைய பிரச்சினைகள் முடிவுறும்."

இவ்வாறு நம்மை காக்கும் கடவுளாக கருணை தெய்வமாக, கலியகத்தின் கண்கண்ட தெய்வமாக இருக்கும் பகவான் சாயிநாதர் இருக்கையில் நமக்கென்ன பயம்.

ஓம் சாயி ஸ்ரீ சாயி ஜெய ஜெய சாயி!

வற்றாத நன்மை தரும் சர்க்கரை வள்ளிக்கிழங்கு!

உலகின் பல நாடுகளில் தினசரி உணவில் முக்கிய உணவாகவும், சத்துணவாகவும், சர்க்கரை வள்ளிக் கிழங்கு திகழ்கிறது.

இந்தியாவின் எல்லாப் பகுதிகளிலும் விளையும் இக்கிழங்கின் தாயகம், அமெரிக்காவாகும். 1492 ஆம் ஆண்டு கொலம்பஸ் இக்கிழங்கை ஸ்பெயினுக்குக் கொண்டு சென்றார். 1572 ஆம் ஆண்டு ஐரோப்பாவிலும் இக்கிழங்கு முதன் முதலாக அறிமுகம் செய்யப்பட்டது. இப்போது இது எல்லா நாடுகளிலும் விளைகிறது.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் மத்தியிலிருந்து உலகில் உள்ள பெரும்பாலான வெப்பமண்டலம் பிரதேசப்பகுதிகளில் இது அதிகம் விளைகிறது. அமெரிக்காவில் மஞ்சள் நிறத்திலும், ஆசியா, ஆப்பிரிக்கக் கண்டப் பகுதிகளில் வெள்ளை நிறத்திலும் சர்க்கரை வள்ளிக்கிழங்கு விளைகிறது.

ரொட்டி, பிஸ்கட், மதுவகைகள் முதலியவற்றில் முக்கிய மூலப் பொருளாய் விளங்கும் இக்கிழங்கு உருளைக்கிழங்கை விட அதிக அளவு உயர்தரமான சத்துக்களை கொண்டதாகவும் விளங்குகிறது.

இதில் ஈரப்பதம் குறைவு. ஆனால் கார்போஹைடிரேட் அதிகம் காணப் படுகிறது. உருளைக்கிழங்கில் இருப்பதைவிடப் புரத சத்தும் வைட்டமின்களும் அதிக அளவு இக்கிழங்கில் உள்ளன.

இதில் உள்ள பழச்சர்க்கரை உடனே உடலுக்குச் சக்தியைக் கொடுக்கிறது. அதனால் கிராமப்புறங்களில் காய்ச்சல் நேரத்தில் தண்ணீர்த்தாகம் ஏற்பட்டால், ஆவியில் வேகவைத்த இக்கிழங்கைக் கொடுக்கிறார்கள். இதனால் பசியும் அடங்குகிறது. மேலை நாடுகளில் இக்கிழங்கை மிக்ஸியில் அரைத்துத் தண்ணீர் சேர்த்துப் பால்போல் சுடவைத்துக் கொடுக்கிறார்கள். இப்படிச் சாப்பிட்டால் காய்ச்சல் மட்டுப்படுகிறது. சோர்ந்துவிட்ட உடலுக்கும் சக்தி கிடைக்கிறது.

100 கிராம் சர்க்கரை வள்ளிக் கிழங்கில் கிடைக்கும் கலோரி 120 ஆகும். இதில் மாவுச்சத்து 28%, கால்சியம் 45 மில்லிகிராமும், பாஸ்பரஸ் 50 மில்லிகிராமும், இரும்புச்சத்து 0.8 மில்லிகிராமும் உள்ளன. இதனால் சிலர் இதைக் காலைப் பலகாரமாகவோ மதிய அரிசி உணவுக்குப் பதிலாகவோ சர்க்கரை வள்ளிக் கிழங்கை மட்டுமே சாப்பிடுகின்றனர்.

உடலுக்குக் குளிர்ச்சியைத் தரும் இக்கிழங்கில் தயாமின் ரிபோ பிலவின், நியாஸின்



போன்ற 'பி' வைட்டமின்கள், வைட்டமின் 'சி' ஆகிய வற்றுடன் மூளைச் சுறுசுறுப்பிற்குப் பயன்படும் பாஸ்பரஸும், இரத்தம் மற்றும் எலும்புகளின் வளர்ச்சிக்குப் பயன்படும் சுண்ணாம்புச்சத்தும் உள்ளன.

இக்கிழங்கு ஓர் உயர்தரமான மாவுப்பொருள் என்பதால், இதைக் குழந்தைகளுக்கு இனிப்புத் தின்பண்டம் போலவும் கொடுக்கலாம். இதனால் உடல் வளர்ச்சி உறுதி செய்யப்படுகிறது.

வைட்டமின் 'சி' நன்கு கிடைக்க வேண்டுமானால் முன்பு கூறியபடி பாலைப்போல் தயாரித்து அருந்த வேண்டும். பொரித்தும், தண்ணீரில் வேகவைத்தும் சாப்பிடலாம். இட்லி அவிப்பது போல ஆவியில் வேகவைத்துச் சாப்பிடுவதுதான் ருசி குறையாதிருக்க வழி.

பண்டைக்காலத்தில் வயிற்றுக்கடுப்பு, சீதளபேதி, மலச்சிக்கல் ஆகியவை குணமாக சர்க்கரை வள்ளிக் கிழங்கைத் தான் அவித்துச் சாப்பிட்டார்கள். சிறுநீர் கழிக்கச் சிரமப்படுபவர்களும் இக்கிழங்கை சாப்பிட்டால் நல்ல குணம் கிடைக்கும்

சர்க்கரை வியாதிக்காரர்கள் கசப்புச் சுவையை உடைய வள்ளிக்கிழங்கின் கீரையை நீரில் கொதிக்க வைத்து, வடிகட்டித் தேநீர் போல அருந்தலாம். இந்த இலைகளுடன் பாகற்காய்த் தோலையும் சேர்த்து கஷாயமாக்கித் தேநீர் தயாரிக்கலாம்.

வள்ளிக்கிழங்குக் கீரையை மற்ற கீரைகளுடன் சமைத்துச் சாப்பிடுவது நீரிழிவுக்கு நல்லது. ஆனால் நீரிழிவுக் காரர்கள் சர்க்கரை வள்ளிக் கிழங்கைத் தவிர்ப்பதே நலம்!

மாவுப்பொருள் அதிகமாய் இருப்பதால் இதய நோய்க்காரர்கள் குறைவாகவே சாப்பிடவேண்டும். மற்றவர்கள் அளவுடன் சாப்பிட்டு, வள்ளிக்கிழங்கின் மூலம் கிடைக்கும் நன்மைகளை பெற்று ஆரோக்கியமாக வாழுங்கள்.

வாழ்க வளமுடன்! வாழ்க வையகம்!

விளம்பரங்கள் வரவேற்கப்படுகின்றன

அன்பான சாயி சொந்தங்களே...உங்களது நிறுவனங்கள், கடைகள், தொடர்பான விளம்பரங்களை பிரசுரித்து பயனடையலாம்.



முழுபக்க விளம்பரம் கறுப்பு / வெள்ளை ரூ.2000

அரைபக்க விளம்பரம் கறுப்பு / வெள்ளை ரூ.1000

முன் பின் அட்டை உள்பக்கம் கலர் ரூ.3000

பின் அட்டை கலர் ரூ.4000

அன்னதான சேவை

அன்பிற்கினிய சாயி சொந்தங்களே...

நமது சாயி மகராஜ் குருவை தேடி பத்திரிகையின் சார்பாக, பிரதிவாரம் வியாழன் தோறும், நடமாட முடியாமல் இருக்கும் முதியோர்கள், உடல் ஊன முற்றோர்கள், மனநலம் குன்றியோர்களின் இருக்கும் இடம் தேடி சென்று அன்ன தான சேவை நடந்து வருகிறது. அன்னதான சேவையில் பங்குபெற காணிக்கை அனுப்ப விரும்பினால் கீழ்கண்ட வங்கி கணக்கிற்கு அனுப்பி உதவலாம்.

ஆன்லைனில் அனுப்ப:

S.Jayanthy, INDIAN BANK
AC.No: 602264370 , IFS Code No: IDIB000P056
(Purasaiwakkam Branch) Chennai
Gpay: 6385129372

இம்மாத அன்னதான நன்கொடையாளர்கள்

திரு. லெட்சுமிபதி. லட்சுமி அம்மன் கோவில் தர்மகர்த்தா.
பெரம்பூர். அரிசி மூட்டை 4.

திரு.சுனில். U.S.A ரூ.3000.

திரு.பாலகிருஷ்ணன்.அண்ணாநகர் ரூ.3000.

திருமதி.ஹேமாவதி நமசிவாயம். சாலிகிராமம்.ரூ.2000.

திரு. தணிகாசலம். அரக்கோணம். ரூ.2000.

திரு. வெங்கடாசலம். டி.நகர். ரூ.1000

திரு. கருப்பையா. ரூ.1000.

திருமதி.உமா விஜய் ஆனந்த். அயனாவரம். ரூ.800.

திரு.சீனிவாசன் மகாலட்சுமி. திருவண்ணாமலை. ரூ.700.
திரு. சித்ரா துரைச்சாமி, பழைய வண்ணாரப்பேட்டை. ரூ.650.
திருமதி.ஜானகி கண்ணன். அயனாவரம்.ரூ.500.
திரு.பி.ராஜகோபாலன். நங்கநல்லூர். ரூ.500
திரு.ஜனார்த்தனன். அம்பத்தூர்.ரூ.500.
திரு. கேஸ்வர். ஈரோடு. ரூ.500.
திரு. சாய்கிருபா. வாடிப்பட்டி. ரூ.500.
திருமதி. நித்யா ராஜேந்திரன். கூடுவாஞ்சேரி. ரூ.500.
திரு.சுப்பிரமணியன். கிண்டி. ரூ.501.
திருமதி. பாக்கியவதி. ராணிப்பேட்டை. ரூ.400.
திரு.பத்ரி நாராயணன். நெய்வேலி. ரூ.300.
திருமதி. பவித்ரா. கொளத்தூர்.ரூ.200
திருமதி.லதா பாபு. வேப்பம்பட்டு.ரூ.200
திரு.குமரன் ஸ்டோர்ஸ்.-டிராவல்ஸ். பெரியார் நகர் ரூ.200.
திரு.கே.ராமமூர்த்தி.L.I.C ஏஜெண்ட். கொளத்தூர்.ரூ.200.
திருமதி.வரலட்சுமி பிரபாகரன். அயனாவரம்.ரூ.200.
திருமதி.பிரியா குடும்பத்தார். அயனாவரம்.ரூ.200
திருமதி.எஸ்.இரங்கநாயகி.நாகை. ரூ.200
திருமதி.பூமிஜா. ரூ.200.
திருமதி. சாந்திமோகன். AYK. ரூ.100.
திருமதி.அபிராமி அசோக்.AYK. ரூ.100
சிவா அரிசி கடை. பெரியார் நகர்.ரூ.50
திரு.அகஸ்டின் குடும்பத்தார்.
திருநீர்மலை. அரிசி 25 கி.



என் பொருட்டு நீ பிறருக்கு செய்யும் அன்னதானத்தின் ஒவ்வொரு பருக்கையும் என் வாயில் இடுவதாக அர்த்தம்.

சந்தா செலுத்தும் அன்பர்களுக்கு...

* 1 வருட சந்தா – ரூ. 220 (தபால் செலவு உள்பட)
* 3 வருட சந்தா – ரூ. 550 (தபால் செலவு உள்பட)
* ஆயுள் சந்தா – ரு. 2,000 (தபால் செலவு உள்பட)

காணிக்கை, சந்தா அனுப்புகின்றவர்களுக்கு மாதம்தோறும் சாயிமகராஜ் குருவை தேடி புத்தகம் உங்கள் இல்லம் தேடி வரும். காணிக்கை சந்தா அனுப்புகிறவர்கள் தவறாது தங்கள் முகவரியை கீழ்கண்ட முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

V. ஸ்ரீராம், ஆசிரியர்
'சாயி மகராஜ் குருவை தேடி',
17/7 A, பழனியப்பா முதல் தெரு, முதல்மாடி,
அயனாவரம், சென்னை – 600 023.

ஆன்லைன் மூலம் காணிக்கை, சந்தா செலுத்த...

V.SRIRAM
INDIAN BANK (Purasaiwakkam Branch) Chennai
AC.No: 6219480677
IFS Code No: IDIB000P056.

புத்தக வளர்ச்சி நன்கொடையாளர்கள்

திரு. பால்கண்ணு. கோவை.ரூ.500.
திரு. சாய்கிருபா. வாடிப்பட்டி. ரூ.500.
திருமதி. இந்துமதி.அயனாவரம்.ரூ.500.
திருமதி.திலகம்.குரோம்பேட்டை.ரூ.300.
திருமதி. ஜெயலட்சுமி தேவக்குமார். பெரம்பூர். ரூ.200.
திரு.வேணுகோபால்.நங்கநல்லூர்.100.
திரு.ஸ்ரீ. ஸ்ரீனிவாசன்.நங்கநல்லூர் ரூ.100

Owned, Publishsed and Printed by: V.SRIRAM. From17/7A, Palaniappa 1st Street, 1st Floor, Ayyanavaram, Chennai-23.At Printed by him at JAYANTHI PRINTERS at No.5.GOVINDARAJAN STREET, PULIYURPURAM, KODAMBAKKAM, CHENNAI -600 024.Editer: V.SRIRAM.





எங்களிடம் மாட்டு கொழுப்பு, ரசாயணம் கலக்காத சுத்தமான தேங்காய் எண்ணெய், வேப்ப எண்ணெய் கொண்டு கைகளால் தயாரிக்கப்பட்ட குளியல் சோப் கிடைக்கும்.

விபரங்களுக்கு:

ஸ்ரீசாய்ராம் ஆத்மஞான சபை, அயனாவரம் – 23.

போன்: 9941816692, 8825831068.

சாய் ராஜயோகாவின் தயாரிப்பு



அமிர்த சூரணம்

அனைத்து நோய்களுக்கும் ஒரே தீர்வு. தொடர்ந்து மூன்று மாதம் எடுத்துக் கொள்ள அதிசயத்தக்க மாற்றத்தை நீங்களே உணரலாம்.

குப்பைமேனித் தைலம்

அனைத்துவிதமான தோல் நோய்களுக்கும் ஓர் அற்புத தீர்வு. சொறி, நமைச்சல் இருக்கும் இடங்களில் தடவ ஒரிரு நிமிடத்திலேயே குணம் கிடைக்கும்.




தேவைக்கு தொடர்பு கொள்ளவும்:

சாய் ராஜயோகா இயற்கை நல்வாழ்வு மையம்

9941816692,
8825831068.

தலைமுடி பிரச்சனைகள் அனைத்திற்கும் 25 மூலிகைகள் அடங்கிய அட்சயா ஹேர் ஆயில் மூலம் ஒரே தீர்வு!



* இயற்கையான பாரம்பரியமுறைப்படி தயாரிக்கப்பட்ட உன்னத ஹேர் ஆயில்.
* பொடுகு, பேன் நீக்கி கருமையான, அடர்த்தியான கூந்தலைப் பெறலாம்.
* இளநரை,செம்பட்டை, முடி உதிர்வு, முடி பிளவு போக்கும்.
* தூக்கம் இன்மை, டென்ஷன் சரி செய்யும்.
* ஆண், பெண் இருவருக்குமானது.

சாய் இராஜ யோகாவின் சீயக்காய் ஹேர்வாஷ் பவுடர்



100 சதவீதம் இயற்கையான பாரம்பரிய முறைப்படி தயாரிக்கப்பட்ட சீயக்காய் பவுடர்



அமிர்தா மூலிகை டீ தூள்

ஆவாரம் பூ, செம்பருத்தி, தாமரை, ரோஜா, துளசி, வேப்பம்பூ, சுக்கு,மிளகு,திப்பிலி,கிராம்பு,சித்தரத்தை, ஏலக்காய் கொண்டு தயாரிக்கப்பட்டது. நீரிழிவு, இதயநோய், இருமல், சளி, இளைப்பு, தலைச்சுற்றல், உடல் பலவீனம் நீங்கும். நல்ல செரிமானம் ஆகும்.

அமிர்தா வேலம்பட்டை பல்பொடி



பல்வலி,சொத்தை,கூச்சம்,பல் ஆட்டம்,ஈறு வீக்கம்,துர்நாற்றம், முதலிய பல் நோய்களுக்கு மிகச் சிறந்த பல்பொடி.

விபரங்களுக்கு: ஸ்ரீ சாயிராம் ஆத்மஞான சபை
99418 16692, 88258 31068